405





# காந்தி

## தமிழ் வாசகம்

405/1-50

OFFICE OF THE REGISTRAR OF ...
8 - FEB 1950
MADRAS

மூன்றாம் வகுப்பு





ழனியப்பா பிரதர்ஸ்

TB
031(3)
N50.3
147819.



# காந்தி தமிழ் வாசகம்

## மூன்றும் வகுப்பு

வித்துவான் திரு. ஐயன்பெருமாள் கோனர்
தமிழ் விரிவுரையாளர்
அர்ச். சூசையப்பர் கல்லூரி, திருச்சி.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - FEB 1950
MADRAS

பழனியப்பா பிரதர்ஸ்

தெப்பக்குளம்
திருச்சிராப்பள்ளி

4, ரட்லண்ட் கேட்
சென்னை 6.

பதிப்புரிமை] 1949 [அணா $7\frac{1}{2}$

# KANTI TAMIL VACHAKAM

STANDARD III

Vidwan **T. Aiyenperumal Konar**

*First Edition* 1949.

147819

600 008.

**The Royal Printing Works, Mount Road, Madras.**

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
8 - FEB 1950
MADRAS

# முகவுரை

காந்தி தமிழ் வாசகம் என்னும் பெயர்கொண்ட இவ்வாசகப் புத்தகங்கள் அரசியலார் 1939-ம் ஆண்டு வெளியிட்டுள்ள பாட திட்டத்திற்கிணங்க முதல் ஐந்து வகுப்புகளுக்குரியனவாக எழுதப்பட்டவையாகும்.

இவ்வாசக புத்தகங்களில் அமைந்துள்ள பாடங்கள் வகுப்பிற்கேற்ற நடையும் பொருளும் அளவும் கொண்டனவாய் ஆராய்ந்தமைக்கப்பட்டுள்ளன. பாடங்களினிறுதியில் அமைக்கப் பட்டுள்ள பயிற்சிகள் மாணவரது இயற்கையறிவைத் தூண்டுமாறும், தேர்ச்சி மிகுமாறும் செய்ய வல்ல தன்மையில் இயற்றப் பட்டுள்ளன. கீழ் வகுப்புக்களில் படப்பயிற்சி சிறந்த முறையில் அளிக்கப்பட்டுள்ளது. இலக்கணப் பயிற்சி அந்தந்த வகுப்புற்கேற்ற அளவில், உதாரணங்களைக்கொண்டு விதிகளை வருவிப்பதாகிய (விதி வருமுறை) Inductive Method என்னும் நன்முறையில் ஆக்கப்பெற்றுள்ளது.

மேற்கண்ட பல்வகை நலன்களும் அமைந்த இவ்வாசகப் புத்தகங்களைப் பள்ளியாசிரியர்களும் கல்வி இலாகா அதிகாரிகளும் பள்ளி மாணவர் கற்குமாறு செய்வார்களானல் அது சிறுவர்க்கும் பயனளிப்பதோடு எமக்கும் ஊக்கத்தையளித்து, பின்னும் இத்தகைய புத்தகங்களை வெளியிட ஏதுவாகும் என்று நம்புகிறோம்.

திருச்சி
10—11—49.

பழனியப்பா பிரதர்ஸ்

# பொருளடக்கம்


| பாடம். | | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | ஔவையார் | ... | 1 |
| 2. | பருந்து | ... | 6 |
| 3. | திசைகள் | ... | 9 |
| 4. | அதற்கென்ன சந்தேகம்! (கதை) | ... | 12 |
| 5. | குரங்குகள் | ... | 16 |
| 6. | கிளி (பாட்டு) | ... | 20 |
| 7. | மனிதருள் மாணிக்கம் | ... | 22 |
| 8. | பதினெட்டாம் பெருக்கு | ... | 25 |
| 9. | சமயோசித புத்தி (கதை) | ... | 29 |
| 10. | வீதி ஒழுங்கு | ... | 33 |
| 11. | அழகு (பாட்டு) | ... | 37 |
| 12. | பனிப் பிரதேச மக்கள் | ... | 39 |
| 13. | கைத்தொழில்கள் | ... | 42 |
| 14. | தென்னை மரம் | ... | 45 |
| 15. | புத்தி கூர்மை (கதை) | ... | 48 |
| 16. | எங்கள் தமிழ் (பாட்டு) | ... | 51 |
| 17. | அற்புத விளக்கு i (கதை) | ... | 52 |
| 18. | மழை பெய்வது எப்படி? | ... | 56 |
| 19. | அற்புத விளக்கு ii (கதை) | ... | 60 |
| 20. | சின்னப் பொம்மை (பாட்டு) | ... | 64 |
| 21. | என் பிரயாணம் | ... | 65 |
| 22. | அற்புத விளக்கு iii (கதை) | ... | 69 |
| 23. | ஆமையும் முயலும் (நாடகம்) | ... | 73 |
| | செய்யுட் பாடங்கள் | | |
| | சுதேச வணக்கம் | ... | 78 |
| | நீதிகள் | ... | 79 |

# காந்தி தமிழ் வாசகம்

மூன்றாம் வகுப்பு

## 1. ஒளவையார்

'அறஞ் செய விரும்பு,' 'ஓதுவது ஒழியேல்' என்னும் நீதிவாக்கியங்களை நீங்கள் படித்திருக்கிறீர்கள். இந்த நீதிவாக்கியங்களை இயற்றியவர் யார் தெரியுமா? **ஒளவையார்** என்பவர்தான் இவர் ஒரு வயது சென்ற கிழவி. இவர் இதுபோல் இன்னும் பல பாடல்களைப் பாடியிருக்கிறார்.

ஒளவையார் நிரம்பப் படித்தவர். இவரைப் பிரபுக்களும் அரசர்களும் விரும்பி ஆதரித்து வந்தார்கள் இவர் நெடுநாள் வாழ்ந்து வந்தார். இதனால் இவரை ஒளவை மூதாட்டியார் என்றும் சொல்லுவார்கள்.

ஒளவையார் மிகவும் எளிய வாழ்க்கையை மேற்கொண்டவர். மிகவும் அடக்கம் உடையவர். தெய்வபக்தி மிகுந்தவர். ஒரு நாள் அவர் ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்கு வழி நடந்து கொண்டிருந்தார் அப்பொழுது நடுப் பகல்; வெயில் காய்ந்து கொண்டு இருந்தது அப்போது முருகக் கடவுள் அங்கே வழியில் இருந்த ஒரு நாவல் மரத்தின் கிளைமீது ஒரு மாடு மேய்க்கும் சிறுவன் போல் உட்கார்ந்திருந்தார். ஒளவையார் அந்த நாவல் மர நிழலில் தங்கினார். மரத்தின் நிழலும் அங்கு வீசிய குளிர்ந்த காற்றும் அவரது களைப்பைச் சிறிது போக்கியது.

மரத்தின் மேலிருந்த சிறுவன் "பாட்டீ! மிகவும் களைப்பாக இருக்கிறீர்களே! சில நாவற்பழங்களைச் சாப்பிடுகிறீர்களா?" என்று அன்போடு கேட்டான். உண்மையிலேயே ஔவையாருக்கும் பசித்தது. "சரி தம்பீ! சில பழங்கள் பறித்துப் போடு" என்றார். உடனே சிறுவன் "பாட்டீ உங்களுக்குச் சுட்ட பழம் வேண்டுமா; சுடாத பழம் வேண்டுமா? எது வேண்டும்?" என்றான்.



சிறுவன் சொல்லியதைக் கேட்ட ஔவையாருக்கு ஒன்றுமே புரியவில்லை. 'நாவற் பழத்தில் சுட்டதும் சுடாததும் உண்டா?' என்று திகைத்தார். பிறகு 'ஏதாவது ஒன்றைக் கேட்டு வைப்போம்' என்று "தம்பீ! சுடாத பழங்களையே பறித்துப் போடு" என்று கேட்டார். உடனே சிறுவன் ஒரு மரக்கிளையை ஆட்டிச் சில பழங்களை உதிரச் செய்தான். பழங்களும் காய்களும் தரையிலே விழுந்தன.

ஔவையார் அவற்றில் பழுத்த பழங்களாகப் பொறுக்கி எடுத்தார். அவை நசுங்கி, அவற்றில் மண்ணும் சிறிது ஒட்டியிருந்தது. ஔவையார் வாயால் ஊதி அவற்றில் உள்ள மண்ணைப் போக்கிச் சாப்பிட்டார். சிறுவன் நகைத்துக்கொண்டே "பாட்டீ! பழங்கள் சுடும்; நன்றாக ஊதிச் சாப்பிடுங்கள்" என்றான்.

ஔவையாருக்கு அப்பொழுதுதான் சிறுவன் சொல்லிய உள் கருத்து விளங்கியது. தனக்கு 'இது முதலில் தெரியாமல் போயிற்றே' என்று வருந்தினர். உடனே சிறுவனும் முருகக் கடவுளாகக் காட்சியளித்து மறைந்தான். முருகனை ஔவையார் வணங்கினர். 'நிரப்பப் படித்துப் பல விஷயங்களை அறிந்திருந்தாலும் உலகத்தில் மேலும் அறிந்து கொள்ளவேண்டியவை பல உண்டு' என்பதை ஔவையார் அறிந்து கொண்டார்

| | | |
|---|---|---|
| ஓதுவது | மூதாட்டியார் | நாவல் மரம் |
| ஒழியேல் | வாழ்க்கை | தங்கினர் |
| நீதிவாக்கியங்கள் | மேற்கொண்டவர் | போக்கியது |
| இயற்றியவர் | அடக்கம் | களைப்பாக |
| நிரம்ப | நடுப்பகல் | சுட்டது |
| விரும்பி | காய்ந்துகொண்டு | சுடாதது |
| ஆதரிக்கப்பட்டு | முருகக் கடவுள் | வருந்தினர் |

## பயிற்சி

### I வினாக்கள்

1. ஔவையார் யார்?
2. அவர் எப்படிப்பட்ட குணங்களை உடையவர்?
3. ஔவையாரை மூதாட்டியார் என்பது ஏன்?
4. ஔவையார் வழிநடக்கையில் நேர்ந்தது என்ன?
5. முருகக் கடவுள் ஔவையாரை எப்படி ஏமாற்றினர்?
6. ஔவையார் கடைசியாக உணர்ந்தது என்ன?

### II தமிழ் நெடுங்கணக்கு

பிள்ளைகளே நீங்கள் பல எழுத்துக்களைக் கற்றுக் கொண்டீர்கள். அந்த எழுத்துக்கள் எல்லாம் எவை என்பதை இப்போது தெரிந்துகொள்ளுங்கள். அடுத்த பக்கத்தில் காட்டியுள்ள அட்டவணையில் அவை வரிசைப் படுத்தி எழுதப்பட்டிருப்பதைப் பாருங்கள்.

## தமிழ்

| அ | ஆ | இ | ஈ | உ | ஊ | எ |
|---|---|---|---|---|---|---|
| க | கா | கி | கீ | கு | கூ | கெ |
| ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ | ஙெ |
| ச | சா | சி | சீ | சு | சூ | செ |
| ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ | ஞெ |
| ட | டா | டி | டீ | டு | டூ | டெ |
| ண | ணா | ணி | ணீ | ணு | ணூ | ணெ |
| த | தா | தி | தீ | து | தூ | தெ |
| ந | நா | நி | நீ | நு | நூ | நெ |
| ப | பா | பி | பீ | பு | பூ | பெ |
| ம | மா | மி | மீ | மு | மூ | மெ |
| ய | யா | யி | யீ | யு | யூ | யெ |
| ர | ரா | ரி | ரீ | ரு | ரூ | ரெ |
| ல | லா | லி | லீ | லு | லூ | லெ |
| வ | வா | வி | வீ | வு | வூ | வெ |
| ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ | ழெ |
| ள | ளா | ளி | ளீ | ளு | ளூ | ளெ |
| ற | றா | றி | றீ | று | றூ | றெ |
| ன | னா | னி | னீ | னு | னூ | னெ |

## வடமொழி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜ | ஜா | ஜி | ஜீ | ஜு | ஜூ | ஜெ |
| ஷ | ஷா | ஷி | ஷீ | ஷு | ஷூ | ஷெ |
| ஸ | ஸா | ஸி | ஸீ | ஸு | ஸூ | ஸெ |
| ஹ | ஹா | ஹி | ஹீ | ஹு | ஹூ | ஹெ |
| க்ஷ | க்ஷா | க்ஷி | க்ஷீ | க்ஷு | க்ஷூ | க்ஷெ |

## நெடுங் கணக்கு

| ஏ | ஐ | ஒ | ஓ | ஔ | ஃ |
|---|---|---|---|---|---|
| கே | கை | கொ | கோ | கௌ | க் |
| ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ | ங் |
| சே | சை | சொ | சோ | சௌ | ச் |
| ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ | ஞ் |
| டே | டை | டொ | டோ | டௌ | ட் |
| ணே | ணை | ணொ | ணோ | ணௌ | ண் |
| தே | தை | தொ | தோ | தௌ | த் |
| நே | நை | நொ | நோ | நௌ | ந் |
| பே | பை | பொ | போ | பௌ | ப் |
| மே | மை | மொ | மோ | மௌ | ம் |
| யே | யை | யொ | யோ | யௌ | ய் |
| ரே | ரை | ரொ | ரோ | ரௌ | ர் |
| லே | லை | லொ | லோ | லௌ | ல் |
| வே | வை | வொ | வோ | வௌ | வ் |
| ழே | ழை | ழொ | ழோ | ழௌ | ழ் |
| ளே | ளை | ளொ | ளோ | ளௌ | ள் |
| றே | றை | றொ | றோ | றௌ | ற் |
| னே | னை | னொ | னோ | னௌ | ன் |

எழுத்துக்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜே | ஜை | ஜொ | ஜோ | ஜௌ | ஜ் |
| ஷே | ஷை | ஷொ | ஷோ | ஷௌ | ஷ் |
| ஸே | ஸை | ஸொ | ஸோ | ஸௌ | ஸ் |
| ஹே | ஹை | ஹொ | ஹோ | ஹௌ | ஹ் |
| க்ஷே | க்ஷை | க்ஷொ | க்ஷோ | க்ஷௌ | க்ஷ் |

# 2. பருந்து

பறக்கும் பட்சிகளில் பருந்து மிகவும் பெரியது. அது ஆகாயத்தில் வட்டமிட்டுப் பறக்கும். அதை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா? அது வானத்தில் வெகு உயரம் பறக்கும்; மேலும் நீண்ட நேரம் பறக்கக் கூடியது.

பருந்துக்கு உறுதியான இரண்டு பெரிய சிறகுகள் உண்டு. இதன் நிறம் கருமையும் சிவப்பும் கலந்த பழுப்பு நிறம். இதன் உடல் பருத்திருக்கும். இதற்கு உறுதியான இரண்டு கால்கள் உண்டு. ஒவ்வொரு காலிலும் முன்னால் மூன்றும் பின்னால் ஒன்றுமாக நான்கு விரல்கள் உண்டு. இந்த விரல்கள் வளைந்து கூர்மையான நீண்ட நகங்களை உடையனவாய் இருக்கும்.



பருந்தின் அலகு நீண்டு கொக்கிபோல் வளைந்து இருக்கிறது. அலகு உறுதியாகவும் மிகக் கூர்மையாகவும் இருக்கும். இதன் கண்கள் வட்டமாக அமைந்துள்ளன. பருந்து நீண்ட தூரம் பார்க்கும் சக்தி யுடையது.

பருந்து ஒரு மாமிச பட்சிணியாகும். எலி, தவளை, பாம்பு, மீன், கோழிக் குஞ்சு, மாமிசத் துண்டுகள் ஆகியவை பருந்தின் உணவுப் பொருள்கள். அது வானத்தில் வட்டமிட்டுக்

கொண்டே இரை தேடும். இரை தென்பட்டதும் திடீரென்று கீழே பாய்ந்து, தன்னுடைய வளைந்த கால்விரல்களால் இரையைப் பற்றிக் கொள்ளும். உடனே மேலே பறந்து சென்று எங்காகிலும் உட்கார்ந்து, தன் கூரிய அலகால், தான் பிடித்த பிராணியின் தோலைக் கிழிக்கும்; உள்ளிருக்கும் மாமிசத்தை உண்ணும்.

கழுகு, இராஜாளி, கருடன், வலியன் இவைகளும் பருந்தின் இனமே. கருடனின் நிறம் பழுப்பாக இராமல் சற்று சிவந்து இருக்கும். அதன் கழுத்து வெண்மையாக இருக்கும்.

எல்லாப் பறவைகளையும் போலப் பருந்தும் முட்டையிட்டுக் குஞ்சு பொரிக்கும்; வருஷத்திற்கு ஒரே முறை முட்டையிடும். பட்சிகளுள் இது பெரிதாகவும், மிகவும் வலிமையுள்ளதாகவும் அதிக உயரம் பறக்கக் கூடியதாகவும் இருப்பதால் இதைப் பட்சிகளின் அரசன் என்று சொல்கிறார்கள்.

| | | | |
|---|---|---|---|
| **பருந்து** | **கூர்மையாக** | **இரை** | **உறுதியான** |
| **ஆகாயத்தில்** | **அமைந்துள்ளன** | **கழுகு** | **வட்டமிட்டு** |
| **உறுதியான** | **சக்தி** | **இராஜாளி** | **வளைந்த** |
| **பழுப்பு** | **மாமிசபட்சணி** | **வலியன்** | **பற்றிக்கொள்ளும்** |
| **அலகு** | **வானத்தில்** | **கருடன்** | **பொரிக்கும்** |

## பயிற்சி

### I வினாக்கள்

1. பருந்து எப்படி இருக்கும்?
2. பருந்து எப்படிப் பறக்கும்?
3. பருந்து இரை தேடுவது எப்படி?
4. பருந்தின் அலகு எப்படி இருக்கிறது?
5. அதன் கால்கள் எப்படி இருக்கின்றன?
6. பருந்தின் இனத்தைச் சேர்ந்தவை யாவை?

## II னகர, ணகர, பேதம்

பின் வரும் வார்த்தைகளின் உச்சரிப்பைக் கவனி; அவற்றை உரத்து வாசி.

| | | | |
|---|---|---|---|
| அன்னம் | அண்ணன் | கன்னம் | கண்ணன் |
| மன்னன் | கிண்ணம் | பொன்னி | கிண்ணி |
| மனம் | மணம் | இனம் | குணம் |
| கனம் | பணம் | வனம் | குணம் |

ன: இது றன்னகரம் என்று சொல்லப்படும்.

ண: இது டண்ணகரம் என்று சொல்லப்படும்.

## III நகர, னகரங்களைப் பற்றிய அறிவு

ந, என்னும் எழுத்து வார்த்தையின் முதலிலும் நடுவிலும் வரும்; கடைசியில் வராது.

ன, என்னும் எழுத்து வார்த்தையின் கடைசியிலும், நடுவிலும் வரும்; முதலில் வராது.

பின் வருவனவற்றை மௌனமாய் வாசி

| | | | |
|---|---|---|---|
| நரி | நத்தை | பந்து | மூந்நூறு |
| நகம் | நடத்தை | சந்திரன் | ஐந்நூறு |
| அரசன் | வேலன் | அன்னம் | வனம் |
| மகன் | குயவன் | சன்னல் | கவனம் |

பின் வருவனவற்றிலுள்ள பிழைகளைத் திருத்து:

| | | | |
|---|---|---|---|
| னரி | னத்தை | பன்து | மூந்று |
| னகம் | னடத்தை | சன்திரந் | ஐன்து |
| அரசந் | வேலந் | அந்நம் | கந்று |
| மகந் | குயவந் | சந்நல் | பன்தயம் |

ந: இது தந்நகரம் என்று சொல்லப்படும்.




# 3. திசைகள்

படத்தில் பையன் என்ன செய்கிறான் பார்! அவன் சூரியனைப் பார்த்து நிற்கிறான் அல்லவா? அந்த விதமாக நீயும் காலையில் சூரியன் உதிக்கும் போது சூரியனைப் பார்த்து நில். அப்போது சூரியன் இருக்கும் பக்கம் **கிழக்கு** என்று சொல்லப் படும். அதற்கு நேர் எதிர்ப்பக்கம், அதாவது உன் முதுகுப் பக்கம் **மேற்கு** ஆகும். உன் கைகள் இரண்டையும் படத்தில் காட்டியபடி பக்கவாட்டில் நீட்டு. உனது வலதுகைப் பக்கம் **தெற்கு**; இடதுகைப் பக்கம் **வடக்கு**. இந்தக் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்பன **திசைகள்** என்று சொல்லப்படும்.

இப்போது எத்தனை திசைகள் சொல்லப் பட்டன? நான்கு அல்லவா? இந்த நான்கு திசைகளும் முக்கியமான திசைகள் ஆகும். இவற்றைத் தவிர வேறு நான்கு திசைகள் உண்டு. அவற்றைச் சொல்லுகிறேன், கேள்!

கிழக்கிற்கும் தெற்கிற்கும் நடுவில் இருக்கும் மூலை **தென்கிழக்குத்** திசை ஆகும். தெற்கிற்கும் மேற்கிற்கும் நடுவில் உள்ள மூலை **தென்மேற்குத்** திசை எனப் படும். மேற்கிற்கும் வடக்கிற்கும் இடையில் உள்ள மூலை **வடமேற்குத்** திசை என்று சொல்லப் படும். வடக்கிற்கும் கிழக்கிற்கும் நடுவில் உள்ள மூலை **வடகிழக்குத்** திசை ஆகும்.

இந்த நான்கு திசைகளோடு முன்கூறிய திசைகளும் சேர்ந்து எட்டுத் திசைகள் ஆகின்றன அல்லவா? ஆகவே திசைகள் எட்டு என்று தெரிந்து கொள்ளுங்கள். இவற்றை **எண்திசைகள்** என்று சொல்லுகிறோம்.

| | | | |
|---|---|---|---|
| திசைகள் | காட்டியபடி | இடதுகை | மூலை |
| உதிக்கும்போது | பக்கவாட்டில் | எத்தனை | நடுவில் |
| எதிர்ப்பக்கம் | வலதுகை | முக்கியமான | இடையில் |
| சொல்லப்படும் | தவிர | முன்கூறிய | எண்திசைகள் |

| | | |
|---|---|---|
| கிழக்கு | கிழக்கு | மேற்கு |
| தெற்கு | தென்கிழக்கு | வடமேற்கு |
| மேற்கு | தெற்கு | வடக்கு |
| வடக்கு | தென்மேற்கு | வடகிழக்கு |

### பயிற்சி

#### I வினாக்கள்

1. நான்கு முக்கிய திசைகளை வரிசையாகச் சொல்லு.
2. எட்டுத் திசைகளை வரிசையாகச் சொல்லு.
3. தெற்கு எது? வடக்கு எது?
4. தென் கிழக்கு எது? வடமேற்கு எது?

## II ரகர, றகர, பேதங்கள்

பின் வருவனவற்றை வாசி

ர: இது இடையின ரகரம்; ற: இது வல்லின றகரம். எந்த வார்த்தையில் எந்த எழுத்து வந்திருக்கிறது என்று கவனி.

அரம் (=ஓர் இரும்பு ஆயுதம்)
அறம் (=தருமம்)
மரம் (=ஒரு தாவரம்)
மறம் (=வீரம்)

இரை (=ஆகாரம்)
இறை (=அரசன்)
உரை (=சொல்லு)
உறை (=பை)

பின் வரும் வாக்கியங்களில் றகர ரகரங்கள் உள்ள வார்த்தைகளில் தவறு இருந்தால் திருத்து.

1. நான் ஓர் அறம் வாங்கினேன்.
2. அரம் செய்வது நன்மை தரும்.
3. மறத்தில் பழங்கள் பழுத்து இருக்கின்றன.
4. பசுவிற்கு இறை புல்.
5. இந்த உரை காகித உரை.
6. நீ உண்மையை உரை.
7. தலையணை உறை பெரியது.
8. அறத்திற்கு மரப்பிடி போட்டிருக்கிறது.
9. இரை தின்ற பாம்பு படுத்திருக்கிறது.
10. ஆலமறம் நல்ல நிழல் தரும்.

பின் வரும் வாக்கியங்களின் உச்சரிப்பைக் கவனி! மௌனமாய் வாசி:

மற — மற்ற
குறம் — குற்றம்
முறம் — முற்றம்

உறு — உற்று
பெறு — பெற்று
மறவன் — மற்றவன்

# 4. அதற்கென்ன சந்தேகம்!

வரகூர் என்னும் ஊரில் வஞ்சகன் என்னும் ஒரு குடியானவன் வாழ்ந்து வந்தான். அவன் ஒரு கிளியை வளர்த்து வந்தான். அதை அவன் சிறு குஞ்சிலிருந்து பழக்கி வந்தான். அவன் அதற்கு 'அதற்கென்ன சந்தேகம்' என்னும் வார்த்தைகளை மட்டும் சொல்லக் கற்றுக் கொடுத்திருந்தான். சொன்னதைச் சொல்லும் கிளிப் பிள்ளை அல்லவா?



வஞ்சகன் இந்தக் கிளியைக் கொண்டு ஏமாற்றிப் பணம் சம்பாதிக்க எண்ணினன். அதற்கு அவன் ஒரு தந்திரம் செய்தான். ஒரு

நாள் அதிகாலையில் ஒரு சந்தைக்குச் சென்றான். எவரும் அறியாமல் ஒரு மரத்தடியில் குழி தோண்டி, பத்து ரூபாய்களைப் புதைத்து வைத்தான். பிறகு அந்த இடத்தில் உட்கார்ந்து "இந்தக் கிளியை வாங்குகிறவர்கள் உண்டா? இதன் விலை ஆயிரம் ரூபாய்" என்று கூவிக் கொண்டு இருந்தான்.

வஞ்சகன் கிளி விற்பதைப் பார்த்த பலரும் அவனை ஏளனம் செய்தார்கள். 'ஒரு கிளிக்கு ஆயிரம் ரூபாய் யாராவது கொடுப்பார்களா?' என்றார்கள். ஒரு தனவந்தர் வஞ்சகன் முன்னால் வந்தார். "இந்தக் கிளியினிடம் உள்ள விசேஷம் என்ன?" என்று கேட்டார். வஞ்சகன் "இது புதையல் இருக்கும் இடத்தை அறிந்து சொல்லும்; வேண்டுமானால் பரிசோதித்துக் காட்டுகிறேன்" என்றான்.

பிறகு, அவன் "ஏ கிளியே! இம்மரத்தடியில் புதையல் கிடைக்குமா?" என்று கேட்டான். கிளியும் உடனே "அதற்கென்ன சந்தேகம்!" என்று பளிச்சென்று மறுமொழி சொல்லியது. வஞ்சகன் உடனே அந்த இடத்தைத் தோண்டினான். அங்கு புதைத்திருந்த பத்து ரூபாய்களையும் வெளியே எடுத்துக் காட்டினான். தனவந்தருக்கு நம்பிக்கை ஏற்பட்டது. ஆயிரம் ரூபாயைக் கொடுத்து, கிளியை வாங்கிக்கொண்டு போனார்.

தனவந்தர் வீட்டிற்குப் போனதும் கிளியினால் புதையல் எடுக்கலாம் என்று பேராசை கொண்டார். வீட்டின் பல இடங்களில் கிளியை வைத்து "இங்கே புதையல் கிடைக்குமா?" என்று கேட்டார். கிளியும் "அதற்கென்ன சந்தேகம்" என்று மறுமொழி சொல்லி வந்தது.

அந்த இடங்களை எல்லாம் தோண்டிப் பார்த்தார்; எங்கும் புதையலே கிடைக்கவில்லை. வீட்டில் பல இடங்களையும் தோண்டியதால் வீடும் பாழாகி விட்டது.

தனவந்தர் வெறுப்பு அடைந்தார். கிளியை நோக்கி "ஏ கிளியே! உன்னால் நான் ஏமாற்றம் அடைநது விட்டேன் அல்லவா?'' என்று கேட்டார். கிளி எப்பொழுதும் போல் "அதற்கென்ன சந்தேகம்!'' என்றது. இதைக் கேட்டுத் திடுக்கிட்டு "நான் ஒரு பெரிய முட்டாள்'' என்று சொல்லி வருந்தினர். உடனே கிளியும் தயங்காமல் "அதற்கென்ன சந்தேகம்!'' என்றது. அதன் பிறகுதான் அவர் 'அக்கிளிக்கு அந்த வார்த்தையைத் தவிர வேறு ஒன்றுமே தெரியாது என்றும், வஞ்சகன் தன்னை ஏமாற்றி விட்டான் என்றும்' உணர்ந்தார். கிளியையும் கூட்டினின்று விரட்டி விட்டார்.

| | | |
|---|---|---|
| வஞ்சகன் | தந்திரம் | மறுமொழி |
| குஞ்சிலிருந்து | கூவிக்கொண்டு | நம்பிக்கை |
| பழக்கி | ஏனம் | பாழாகிவிட்டது |
| சந்தேகம் | தனவந்தர் | ஏமாற்றம் |
| கற்றுக்கொடுத்து | விசேஷம் | திடுக்கிட்டு |
| கிளிப்பிள்ளை | பரிசோதித்து | தயங்காமல் |
| சம்பாதிக்க | புதையல் | விரட்டிவிட்டார் |

## பயிற்சி

### I வினுக்கள்

1. வஞ்சகன் என்ன வஞ்சகம் செய்தான்?
2. தனவந்தர் கிளியை ஏன் வாங்கினர்?
3. தனவந்தர் ஏமாற்றம் அடைந்தது எவ்வாறு?

## II லகர, ழகர, ளகர பேதங்கள் :

பின் வரும் வார்த்தைகளைக் கவனி. அவற்றில் ல, ழ, ள என்னும் எழுத்துக்கள் மாறி வருவதால் பொருள் வேறுபடுவதைத் தெரிந்துகொள்.

| | | |
|---|---|---|
| அலை — அழை | மலை — மழை | வலை — வளை |
| குலம் — குளம் | வலம் — வளம் | தாள் — தாழ் |
| கலம் — களம் | தவலை— தவளை | கலகம்—கழகம் |
| கொல்லை— கொள்ளை | விலை — விளை | புகல் — புகழ் |

கலை — களை — கழை
வால் — வாள் — வாழ்
தலை — தளை — தழை
இலை — இளை — இழை

பிழைகளைத் திருத்துக :

1. கடலில் அழை எழும்பி வந்தது.
2. குலத்தில் மீன்கள் நிறைய இருக்கும்.
3. மலையில் சென்றால் நனைய நேரிடும்.
4. பசுவினிடமிருந்து பாழ் கிடைக்கும்.
5. குரங்கிற்கு நீலமான வாள் உண்டு.

கோடிட்ட இடங்களை நிரப்பு :

1. ஆடு —— தின்னும்.
2. வாழை —— பெரியதாய் இருக்கும்.
3. உன் மோதிரத்தின் —— என்ன ?
4. குளத்தில் —— கத்துகின்றன.
5. குதிரில் எட்டு —— நெல் இருக்கிறது.

---

# 5. குரங்குகள்

நமது நாட்டில் குரங்குகள் சாதாரணமாக எங்கும் இருப்பதைக் காணலாம். மிருகங்களுக்குள் ஏறக் குறைய மனிதனை ஒத்திருப்பது குரங்கு. மனிதனைப்போல் குரங்கிற்கும் இரண்டு கைகளும் இரண்டு கால்களும் இருப்பதாகக் காணப்படுகிறது அல்லவா? ஆனால் உண்மையாகச் சொல்லப் போனால் அதன் இரண்டு கால்களையும் கைகள் என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் பாதங்களில் உள்ள விரல் அமைப்பு கைகளின் விரல் அமைப்பைப் போலவே இருக்கிறது. இதனால் குரங்கை **நான்கு கைப் பிராணி** என்றும் சொல்லலாம்.

இதன் பாதங்களின் அமைப்பு இப்படி இருப்பானேன்? குரங்குகள் மரக்கிளையின்மேல் வசிக்கின்றன. அவை மரத்தின் மேலேயே அங்கும் இங்கும் ஓடியாடித் திரிகின்றன. அப்போது மரக்கிளைகளைக் கைகளைப் போல் கால்களும் நன்ருகப் பிடித்துக்கொள்வதற்கு ஏதுவாக இப்படி அமைந்திருக்கிறது.



குரங்குகள் சதா ஏதாவது குறும்பு செய்யும் குணம் உள்ளவை. அதனல் குறும்பு செய்யும் பையனை 'குரங்கு சேஷ்டை செய்கிருன்' என்று சொல்வது வழக்கம். ஆனல் குரங்குகள் மிகவும் சுறுசுறுப்பு உள்ளவை. அவை குட்டிகளிடத்தில் மிகவும் அன்பு உள்ளவை. தாய்க் குரங்கு தன்

தன் குட்டியை வயிற்றில் கட்டிக்கொண்டு கிளைக்குக்கிளை தாவிச் செல்வதை நீங்கள் பார்த்திருக்கலாம். குரங்கு காய்கனிகளைத் தின்னும் பிராணி. அது மாமிசம் சாப்பிடாது. அதன் வாயில் கன்னங்களின் பக்கமாக இரு புறங்களிலும் பைகள் உண்டு. தான் உண்ணும் உணவை அது அந்தப் பைகளில் அடக்கி வைத்துக் கொள்ளும்.



குரங்குகளில் பலவகை உண்டு. சாதாரணமாக நமது நாட்டில் காணப்படும் குரங்குகள் பழுப்பு நிறமானவை; குட்டையான வால் உள்ளவை. சில குரங்குகளுக்கு நீளமான வால் உண்டு. நீண்ட வால் குரங்கு உருவத்தில் சிறியதாய் இருக்கும். இவ்வகையில் சில, மிகவும் கறுப்பு நிறமாய் இருக்கும். அவை கருங்குரங்குகள் எனப்படும். சிலவற்றின் முகத்தைச் சுற்றிலும் வெண்மையான மயிர் அடர்ந்து வளர்ந்திருக்கும். வேறு சிலவற்றின் முகத்தைச் சுற்றிலும் கருமையான மயிர் அடர்ந்திருக்கும். இவை கொண்டை முசிர்கள் என்று சொல்லப்படும்.



குரங்குகளில் சிலவற்றிற்கு வால் மிகவும் குட்டையாக இருக்கும். இவ்வகைக் குரங்குகள் பெரியனவாக இருக்கும். குட்டை வால் குரங்குகள் பாபூன் குரங்குகள்

என அழைக்கப்படும். இவை கூட்டம் கூட்டமாக வாழும். கூட்டமாய்ச் சேர்ந்து போய்ப் பழத் தோட்டங்களில் புகுந்து பழங்களைக் கொள்ளை யடிக்கும். அப்போது சில குரங்குகள் காவல் காக்கும். மனிதர் வருவதைக் கண்டதும் இவை கூச்சலிடும். உடனே எல்லாக் குரங்குகளும் அகப்பட்டதைச் சுருட்டிக்கொண்டு ஓடிவிடும்.



வாலில்லாக் குரங்கு **கொரில்லா** எனப்படும். இவை ஆணும் பெண்ணுமாக ஜோடி ஜோடியாய்த் தனித்து வாழும். இவை மிகுந்த பலம் உள்ளவை. சிங்கம், புலி ஆகியவற்றிற்குக் கூட இவை பயப்படமாட்டா. கழி முதலியவற்றை உபயோகித்து மனிதனைப் போலவே இவை சண்டை போடும். மனிதரைப் பார்த்து அவர்களைப் போலவே காரியம் செய்வதில் இவை மிகவும் சாமர்த்தியம் உடையவை. இவற்றைப் பழக்கிப் பலவித வேடிக்கைகளைச் செய்யுமாறு செய்வதும் உண்டு.

| | | |
|---|---|---|
| ஏறக்குறைய | குறும்பு | பாபூன் |
| ஒத்திருப்பது | குரங்குச் சேஷ்டை | அகப்பட்டதை |
| உண்மையாக | சுறுசுறுப்பு | சுருட்டிக்கொண்டு |
| திரிகின்றன | காய்கனிகள் | கொரில்லா |
| சதா | அடக்கி | சாமர்த்தியம் |
| ஏதாவது | கொண்டை முசிர் | வேடிக்கை |

## பயிற்சி

### I வினுக்கள்

1. குரங்குகளை நான்கு கைப் பிராணி என்று ஏன் சொல்லுகிருர்கள்?
2. குரங்குகளின் சில வகைகளைக் கூறுக.
3, குரங்குகளின் குணம் எப்படிப் பட்டது?
4. கொரில்லா, பாபூன் - இவற்றைப் பற்றி நீ அறிவது என்ன?

### II வாக்கிய அறிவு

பின் வருவனவற்றை வாசி

(1) குரங்கு மரத்தில் வசிக்கிறது.
(2) குரங்கு பழங்களைப் பறித்துத் தின்னும்.

இங்கே சில சொற்கள் சேர்ந்து நின்று ஒரு முடிந்த கருத்தைத் தெரிவிக்கின்றன. இவ்வாறு சொற்கள் சேர்ந்து வந்தால் அது வாக்கியம் எனப்படும்.

அறிந்துகொள்

**பல சொற்கள் ஒன்று சேர்ந்து ஒரு முடிந்த கருத்தை அறிவித்து நின்ருல் அது 'வாக்கியம்' எனப்படும்.**

பின் வருபவைகளைக் கவனி:

(1) வசிக்கிறது குரங்கு மரத்தில்.
(2) தின்னும் பறித்து குரங்கு பழங்களை.

இப்படிச் சொன்னல் பொருள் நன்ருக விளங்குகிறதா? இல்லையல்லவா?

அறிந்துகொள்

**பல வார்த்தைகள் ஒன்று சேர்ந்தாலும் பொருள் விளங்காவிட்டால் அது வாக்கியம் ஆகாது.**

பின் வரும் வார்த்தைகளைத் தக்கபடி ஒன்று சேர்த்து வாக்கியமாக எழுது.

1. பல வகை குரங்குகளில் உண்டு.
2. சுறுசுறுப்பு குரங்குகள் உள்ளவை.
3. அங்கு மிங்கும் திரியும் குரங்குகள் மரத்தின்மேல்.
4. பார்த்தது நீ குரங்கை உண்டா?
5. பிராணி மரத்தில் குரங்கு வசிக்கும்.



# 6. கிளி



தேமலர்ச் சோலையிலே—வாசமெழு
தென்றல் உலாவையிலே
மாமண மங்கையைப் போல்—பெரிது
மகிழ்ந்து நீ தங்கினையோ ? (1)

பச்சிலையும் கனியும்—நிறைந்து
படர்ந்து வளர் ஆலின்
உச்சியிற் சென்றிருந்தால்-எப்படியான்
உன்னையும் கண்டிடுவேன் ? (2)

நாடுமென் னுள்ளத்திலே—குடிபுகும்
நாயகி கை யமர்ந்து
பாடி யமுதளிக்கும்—அழகிய
பைங்கிளி நீ யலவோ ? (3)



பூனைகள் இங்குவரா—வேடர்தம்
பொறியின் பயமு மில்லை
யானுனைக் காத்திடுவேன்—இறங்கிநீ
என் கையில் வந்திடாயோ ? (4)

வட்டமான கழுத்தில்—ஒருநாளும்
வாடாத ஆர மதை
இட்டவர் ஆரடியோ—எனக்கும்
இயம்பு வையே கிளியே ! (5)

—தேசிகவிநாயகம் பிள்ளை

### பயிற்சி

### வாக்கிய அறிவு

1. குரங்கு மரத்தில் வசிக்கும்.
2. குரங்கிற்கு வால் உண்டு.
3. குரங்கு சதா ஏதாவது குறும்பு செய்யும் குணம் உடையது.
4. குரங்கு காய்கனிகளைத் தின்னும்.
5. குரங்கு மாமிசம் தின்னாது.

மேற்கண்ட ஒவ்வொன்றும் குரங்கைப்பற்றி எழுதப் பட்ட ஒரு வாக்கியம் ஆகும்.

(1) கிளி அழகான பறவை.
(2) கிளி ஆலமரத்தின் உச்சியில் இருக்கிறது.
(3) கிளி மங்கையின் கையில் உட்கார்ந்திருக்கிறது.
(4) கிளியின் கழுத்தில் வட்டமான ஆரம் இருக்கிறது.
(5) கிளி சொன்னதைச் சொல்லும்.

மேற்கண்ட ஒவ்வொன்றும் கிளியைப்பற்றி எழுதப் பட்ட ஒரு வாக்கியம் ஆகும்.

i பருந்து ஆகாயத்தில் வட்டமிட்டுப் பறக்கும்.

ii பருந்துக்கு உறுதியான இரண்டு சிறகுகள் உண்டு.

iii பருந்து நீண்ட தூரம் பார்க்கும் சக்தி உடையது.

மேற்கண்ட ஒவ்வொன்றும் பருந்தைப்பற்றி எழுதப் பட்ட ஒரு வாக்கியம் ஆகும்.

இவ்விதமாக நீங்களும் குரங்கு, கிளி, பருந்து இவற் றைப்பற்றி ஆளுக்கு ஒரு வாக்கியம் எழுதுங்கள்.

பின்வரும் வார்த்தைகளைத் தக்கபடி சேர்த்து வாக்கியமாக்கி எழுது.

1. நிறமாய் பச்சை இருக்கும் கிளி.
2. குணம் குரங்கு குறும்பு உள்ளது செய்யும்.
3. பறவை பருந்து தின்னும் மாமிசம்.
4. கிளிக்கு வஞ்சகன் என்ன கற்பித்தது ?
5. அதற்கென்ன கிளி சந்தேகம் என்றது.
6. கிழவி ஒரு ஔவையார் சென்ற வயது.

# 7. மனிதருள் மாணிக்கம்

மனிதருள் மாணிக்கம் ஜவாஹர்லால் நேரு என்பவர்தான்! இந்தப் பெயர் இவருக்கு எப்படி வந்தது? நமது நாட்டின் தந்தை ஆகிய மஹாத்மா காந்தியடிகள் தான் இவருக்கு இப்பெயர் வைத்தார். இவர் சிறந்த குணம் உள்ளவராக இருக்கிறபடியால் இவருக்கு இப்பெயர் வைத்தார். இவரைப்பற்றி இப்போது நாம் படிப்போம்.



ஜவாஹர்லால் நேரு அலகாபாத் என்னும் நகரத்தில் பிறந்தார். அவரது தந்தையார் பெயர் மோதிலால் நேரு. மோதிலால் ஒரு சிறந்த வக்கீல்; பெரிய பணக்காரர். ஜவாஹரின் தாயார் பெயர் சொரூப ராணி அம்மையார். பணக்காரர் குடும்பத்தில் பிறந்தபடியால் ஜவாஹர் மிகச் செல்வமாக வளர்க்கப்பட்டார். தம் பெற்றோரிடம் அவர் மிகவும் அன்பும் மரியாதையும் உடையவர்.

ஜவாஹர் சிறுவயதில் இருந்தே படிப்பில் ஊக்கம் காட்டினர். ஆங்கிலம், ஸமஸ்கிருதம், ஹிந்தி ஆகிய மொழிகளைக் கற்ருர். தமது பதினைந்தாவது வயதில் அவர் இங்கிலாந்துக்குச் சென்ருர். அங்கே ஏழு ஆண்டுகள் இருந்து கல்வி கற்று, பாரிஸ்டர் என்னும் பட்டம் பெற்ருர். இந்தப் பட்டம் பெற்றவர்கள் வக்கீல் தொழில்

செய்வது வழக்கம். ஜவாஹரும் அவ்விதமே அலகாபாத்தில் வக்கீல் ஆக இருந்தார்.

அந்தக் காலத்தில் இந்தியா சுதந்தரம் அடையவில்லை. சுதந்தரம் கிடைப்பதற்காகப் பலர் பாடுபட்டார்கள். மஹாத்மா காந்தி அவர்களுக்குத் தலைவராக இருந்தார், இவர்களுடைய கூட்டத்திற்குக் **காங்கிரஸ் மகாசபை** என்று பெயர். இச் சபையில் ஜவாஹரும் சேர்ந்து கொண்டார். நன்ருகப் பாடுபட்டார். நான்கு முறை காங்கிரஸ் தலைவர் பதவியை ஏற்று அதைத் திறமையுடன் நடத்தினர். அக்காலத்தில் அவர் அடைந்த கஷ்டங்களுக்குக் கணக்கே கிடையாது. பல தடவை சிறையில் அடைக்கப்பட்டார். பல தடவை தடியடி பட்டார்.

ஜவாஹர் காந்தியடிகளிடம் மிகுந்த அன்பு உள்ளவர். அவருடைய கொள்கைகளில் நம்பிக்கை உள்ளவர், அவர் காட்டிய வழியில் நடந்து வந்தார். இந்திய சுதந்தரப் போராட்டத்தில் முன்னல் நின்ருர். இப்போது சுதந்தரம் கிடைத்த பிறகும் அவர் தேசத்திற்காக உழைத்து வருகிருர். இப்போது அவர் செய்துவரும் அருஞ் செயல்கள் மிகவும் மேன்மை உள்ளவை. இதனல் இவர் இந்தியாவிற்கு மட்டும் அல்லாமல் உலகத்திற்கே தலைவர் என்று சொல்லலாம்.

| | | |
|---|---|---|
| மாணிக்கம் | மரியாதை | பாடுபட்டார் |
| வைத்தார் | ஆங்கிலம் | அடைக்கப்பட்டார் |
| வக்கீல் | ஸமஸ்கிருதம் | தடியடி |
| பணக்காரர் | ஹிந்தி | ஏற்று |
| செல்வமாக | பாரிஸ்டர் | திறமையாக |
| வளர்க்கப்பட்டார் | காங்கிரஸ் | சுதந்தரம் |
| பெற்ருேர் | மகாசபை | மேன்மை |

### பயிற்சி

### I வினுக்கள்

1. மனிதருள் மாணிக்கம் யார் ?
அவருக்கு அப்பெயர் எப்படி ஏற்பட்டது ?
2. ஜவாஹரின் பெற்ரோர் பெயர் என்ன ?
3. அவர் என்னென்ன கற்ருர் ?
4. தேசத்திற்காக அவர் செய்தது என்ன ?
5. அவர் தேசத்திற்காக உழைத்த விதத்தைக் கூறுக.

### II எழுவாய், பயனிலை, செயப்படு பொருள் அறிவு :

#### (1) எழுவாய் அறிவு

கோடிட்ட இடங்களை நிரப்பு :

(1) —— வந்தான்.
(2) —— கோலம் போடுகிருள்.
(3) —— வேகமாய் ஓடும்.
(4) —— கடைக்குப் போய்ச் சாமான் வாங்கினுன்.
(5) —— மரத்தின் மேல் சுலபமாக ஏறும்.

#### (2) பயனிலை அறிவு

கோடிட்ட இடங்களை நிரப்பு :

(1) வேலன் பள்ளிக்கூடம் ——— .
(2) கமலம் பழத்தை வாங்கி ——— .
(3) கிளியைப் பேசப் ——— .
(4) பருந்து ஆகாயத்தில் வட்டமிட்டுப் ——— .
(5) ஜவாஹர் இங்கிலாந்துக்குச் சென்று ——— .

#### (3) செயப்படு பொருள் அறிவு

கோடிட்ட இடங்களை நிரப்பு :

(1) அவன் மரத்திலிருந்து ——— பறித்தான்.
(2) முருகன் ——— விலைக்கு வாங்கினுன்.
(3) கோயில் வாசலில் ——— பார்த்தேன்.
(4) மரத்தின் மேல் உள்ள ——— பார்த்தாயா ?
(5) நீ ஏன் ——— எடுத்தாய் ?

———

# 8. பதினெட்டாம் பெருக்கு

தமிழ் நாட்டில் பல பண்டிகைகள் கொண்டாடப் படுகின்றன. அவற்றுள் பதினெட்டாம் பெருக்கு ஒன்று. இது ஆண்டுதோறும் ஆடிமாதம் பதினெட்டாம் நாள் அன்று கொண்டாடப் படுகிறது.



இந்த மாதத்தில் தமிழ் நாட்டில் உள்ள ஆறுகளில் எல்லாம் வெள்ளம் அதிகமாக வரும். இந்த வெள்ளப் பெருக்கின் நன்மையைக் குறித்து மகிழ்ச்சியுடன் இந்தப் பண்டிகை கொண்டாடப் படுகிறது.

ஆற்று வெள்ளம் சிறு கால்வாய்களின் வழியாக வயல்களுக்குப் பாய்ந்து விளைச்சலைக் கொடுக்கிறது. இன்னும் அது ஏரி, குளம் முதலியவற்றில் நிறைந்து மனிதருக்கும் மற்றப் பிராணிகளுக்கும் பலவகைகளில் பயன்படுகிறது. ஆறுகளில் அணைகளைக் கட்டித் தண்ணீரைத் தேக்கி மழை இல்லாத காலங்களில் அந்த நீரை வயல்களுக்குப் பாய்ச்சுகிறார்கள்.

மேற்கூறியவாறு ஆற்று வெள்ளம் பல நன்மைகளுக்குக் காரணமாக இருப்பதால் ஜனங்கள் இந்த நாளை மிகவும் சந்தோஷமாகக் கொண்டாடுகிறார்கள். ஆண்களும் பெண்களும் ஆற்றில் குதித்து நீந்திக் குளிக்கிறார்கள். ஆற்றங்கரையில் மாவிளக்குகள் ஏற்றிப் பூசை செய்கிறார்கள். ஆற்று வெள்ளத்திற்கும் பூசை செய்து தின்பண்டங்களையும் வேறு பல பொருள்களையும் ஆற்று நீரில் போடுகிறார்கள். பல வகைக் கட்டுச் சாதம் கட்டிக்கொண்டு வந்து ஆற்றங்கரையில் வைத்துக் கொண்டு சாப்பிடுகிறார்கள். சிலர் ஆற்று வெள்ளத்தில் வெகுதூரம் வரை நீந்தி விளையாடுகிறார்கள். சிலர் வாழை மரத்தைத் தெப்பம் போலக் கட்டி அதன் உதவியால் ஆற்றில் நீந்துவது உண்டு. சிலர் மதகுகளின் மேலிருந்து நீரில் குதித்து நீந்துவார்கள்.

இந்தப் பண்டிகை தமிழ்நாட்டுக்கே சிறப்பான ஒரு பண்டிகை. மிகப் பழைய காலந் தொட்டு இது கொண்டாடப்பட்டு வருகிறது. அந்தக் காலத்தில் இந்தப் பண்டிகை நாளில் பல வகையான ஓடங்களில் ஜனங்கள் ஏறிக் கொண்டு ஆற்றுவெள்ளத்தில் சென்று வருவார்கள். அந்த ஓடங்களின் முன்பக்கம் யானைமுகம் போலவும், சிங்க முகம் போலவும், அன்னப் பறவையின் முகம் போலவும் அமைக்கப்பட்டு இருக்கும். இந்த வரலாறு பழைய தமிழ் நூல்களால் தெரிய வருகிறது.

| | | |
|---|---|---|
| **பண்டிகை** | **முதலியவற்றில்** | **களிக்கிறார்கள்** |
| **பதினெட்டாம்பெருக்கு** | **பாய்ச்சுகிறார்கள்** | **ஆற்றங்கரை** |
| **ஆடிமாதம்** | **அணை** | **மாவிளக்கு** |
| **வெள்ளம்** | **சிறந்தது** | **தின்பண்டங்கள்** |
| **வெள்ளப் பெருக்கு** | **சந்தோஷமாக** | **தெப்பம்** |
| **கால்வாய்கள்** | **கொண்டாடப்படுகிறது** | **நூல்கள்** |

## பயிற்சி

### I வினாக்கள்

1. பதினெட்டாம் பெருக்கு என்பது என்ன ?
2. பதினெட்டாம் பெருக்குப் பண்டிகை எப்படிக் கொண்டாடப் படுகிறது ?
3. இப்பண்டிகையைப் பற்றிப் பழைய நூல்களில் கூறப்பட்டிருப்பது என்ன ?
4. ஆற்று வெள்ளத்தால் ஏற்படும் நன்மைகள் யாவை ?

### II வாக்கிய அறிவு

பின்வரும் வாக்கியங்களைக் கவனி.

(1) இராமன் பள்ளிக்கூடம் போகிறான்.

(2) இராமன் பள்ளிக்கூடம் போகவில்லை.

இவற்றில் முதல் வாக்கியம் ஒரு காரியம் நடைபெற்றதைக் குறிக்கிறது. இரண்டாவது வாக்கியம் அந்தக் காரியம் நடைபெறவில்லை என்பதைக் குறிக்கிறது.

அதாவது

முதல் வாக்கியம் ஒன்றை உண்டு என்கிறது.

இரண்டாவது வாக்கியம் ஒன்றை இல்லை என்கிறது.

பின்வரும் வாக்கியங்களில் உண்டு என்னும் வாக்கியங்கள் எவை ? இல்லை என்னும் வாக்கியங்கள் எவை ?

(1) நான் பாடம் படித்தேன்.
(2) நான் பாடம் படிக்கவில்லை.
(3) பாலன் பழம் தின்றான்.
(4) பாலன் பழம் தின்னவில்லை.
(5) உபாத்தியாயர் இன்று பாடம் கற்பிக்கவில்லை.
(6) உபாத்தியாயர் நேற்று பாடம் கற்பித்தார்.
(7) கண்ணன் காலையில் எழுந்ததும் விளையாடினான்.
(8) கமலத்தின் புத்தகம் கிழிந்துவிட்டது.
(9) நான் இன்று கடைக்குப் போகமாட்டேன்.
(10) மரத்தில் இருந்த காக்கை ஓடிவிட்டது.

**பின்வரும் வாக்கியங்களைக் கவனி :**

(1) இராமன் முருகனுக்குப் புத்தகம் கொடுத்தான்.
(2) இராமன் முருகனுக்குப் புத்தகம் கொடுக்கவில்லை.

இங்கே முதல் வாக்கியம் உண்டு என்னும் வாக்கியம். இரண்டாவது வாக்கியம் இல்லை என்னும் வாக்கியம்.

இங்கே,

உண்டு என்னும் முதல் வாக்கியத்தை இரண்டாவது வாக்கியத்தில் இல்லை என்னும் வாக்கியமாக மாற்றி எழுதப்பட்டிருக்கிறது.

**பின்வரும் வாக்கியங்களைக் கவனி :**

(1) இராமன் நல்ல பழங்களாக வாங்கவில்லை.
(2) இராமன் நல்ல பழங்களாக வாங்கினான்.

இங்கே,

இல்லை என்னும் முதல் வாக்கியத்தை இரண்டாவது வாக்கியத்தில் உண்டு என்னும் வாக்கியமாக மாற்றி எழுதப்பட்டிருக்கிறது.

பின்வரும் வாக்கியங்களில் உண்டு என்னும் வாக்கியங்களை இல்லை என்னும் வாக்கியங்களாகவும், இல்லை என்னும் வாக்கியங்களை உண்டு என்னும் வாக்கியங்களாகவும் மாற்றி எழுது.

(1) கந்தன் நல்ல பையன்.
(2) வேலன் மேடையிலிருந்து கீழே விழுந்தான்.
(3) குமரன் படியிலிருந்து குதிக்கவில்லை.
(4) அவன் பந்தைத் தூக்கி எறிந்தான்.
(5) எனக்கு இன்று காலை ஆகாரம் கிடைக்கவில்லை.
(6) ஆடு குன்றின்மேல் ஒதித்து ஓடிற்று.
(7) இந்தக் கிணறு அதிக ஆழம் உள்ளது.
(8) அந்த ஊர் வெகு தூரத்தில் இருக்கிறது.
(9) அவன் எனக்குப் பணம் தரவில்லை.
(10) வெள்ளிக்கிழமை கோயிலுக்குப் போனான்.

# 9. சமயோசித புத்தி

ஒரு நாள் இரவு ஒரு குடியானவன் வீட்டில் ஒரு திருடன் புகுந்தான். அவன் அங்கே கொல்லையில் இருந்த அவரைப் பந்தலின் கீழ் ஒளிந்துகொண்டிருந்தான். ஏனெனில் வீட்டில் சந்தடி அடங்கவில்லை. குடியானவன் சாப்பிட்டுக் கொண்டிருந்தான். எல்லோரும் தூங்கிய பிறகு திருடலாம் என்று திருடன் எண்ணமிட்டு அங்கேயே பதுங்கி இருந்தான்.



குடியானவன் சாப்பிட்டுவிட்டுக் கை கழுவுவதற்காகக் கொல்லைப்புறம் வந்தான். இருட்டாக இருந்ததால் கையில் விளக்கு எடுத்து வந்தான். அப்பொழுது கொல்லையில் உள்ள அவரைப் பந்தல்மீது விளக்கு வெளிச்சம் பட்டது. அங்கு திருடன் பதுங்கி உட்கார்ந்திருப்பதைக் கண்டு கொண்டான்.

குடியானவன் திருடனைப் பிடித்துத் தண்டிக்க எண்ணினான். தன் ஒருவனால் மட்டும் அவ

னைப் பிடிக்கமுடியாது என்பதை உணர்ந்தான். 'வேறு மனிதரைக் கூவி அழைப்பதும் முடியாது' என்று எண்ணினன். ஏனெனில் அப்படிச் செய்தால் திருடன் அவனை அடித்துவிட்டு ஓடிப் போகக்கூடும். 'அங்கிருந்து போய் மற்றவர்களைக் கூட்டிக்கொண்டு வரலாமா' என்று எண்ணினன். 'அப்படிச் செய்வதற்குள் திருடன் ஓடிப்போய்விட்டால் என்ன செய்வது' என்றும் சந்தேகம் உண்டாயிற்று.

முடிவில் அவன் ஒரு சூழ்ச்சி செய்தான். அதாவது, தான் கையலம்பக் கொண்டு வந்திருந்த நீரையெல்லாம் கொப்புளித்துத் திருடன் மேல் உமிழ்ந்தான். தன் மனைவியைக் கூப்பிட்டுப் புதிய நீர் கொண்டுவரச் செய்து அதையும் அவ்வாறே செய்தான். இவ்வாறு அவன் நான்கு செம்பு நீரைக் காலி ஆக்கினன்!

திருடன், தன்மேல் குடியானவன் நீர் கொப்புளித்து உமிழ்ந்ததை லட்சியம் செய்யவில்லை. குடியானவன் தன்னைக் கண்டு கொண்டுதான் அப்படிச் செய்கிறான் என்பதை அவன் அறிந்து கொள்ளவில்லை. தான் அசைந்தால் தன்னை அவன் அறிந்து கொண்டுவிடுவான் என்று நினைத்து எல்லாவற்றையும் பொறுத்துக்கொண்டு அசையாமல் உட்கார்ந்து இருந்தான்!

குடியானவன், மனைவியைக் கூப்பிட்டு மறுபடியும் செம்பில் நீர் கேட்டான். மனைவி தண்ணீர் கொண்டுவர மறுத்துவிட்டாள். குடியானவன் அதனால் கோபம் அடைந்தவன்போல, மிகுந்துள்ள நீரை அவள்மீது கொப்புளித்து உமிழ்ந்தான். உடனே அவள் தன் கணவனுக்குப் பைத்தியம் பிடித்து விட்டதென்று நினைத்துக் கூக்குரலிட்டு வீட்டினுள்ளே ஓடினள்.

குடியானவன் மனைவி அண்டை அயல் வீடுகளுக்கு ஓடிப்போய் அங்குள்ளவர்களை யெல்லாம் பைத்தியம் பிடித்த தன் கணவனைக் காண்பிக்கக் கூட்டி வந்தாள். குடியானவன் வந்தவர்களைப் பார்த்து "என் மனைவி நன்றி இல்லாதவள்; என்னிடம் எல்லா நன்மைகளையும் பெறுகிறாள். அப்படி யிருந்தும் நான் கொப்புளித்த ஒரு வாய் நீரைத் தாங்கிக் கொள்ளப் பொறுமை இல்லாமல் உங்களை அழைத்து வந்திருக்கிறாள். இதோ பாருங்கள்! என்னிடம் எவ்வித நன்மையும் பெறாமல் நான் கொப்புளித்த நான்கு செம்பு நீரையும் தாங்கிக்கொண்டு உட்கார்ந்திருக்கும் இந்தப் புண்ணியவானைப் பாருங்கள்!" என்று திருடனைச் சுட்டிக் காட்டினான். ஓடவும் முடியாமல் ஒளிந்திருக்கவும் முடியாமல் திருடன் திருட்டு விழிகளை உருட்டி விழித்தான்.

வந்தவர்களுக்குத் திருடனைப் பார்த்ததும் சிரிப்பு உண்டாயிற்று. திருடனைக் கண்டுபிடிக்க அவன் செய்த சூழ்ச்சியை அறிந்து மெச்சினார்கள். திருடனைப் பிடித்துத் தக்கபடி தண்டனை அடையச் செய்தார்கள்.

**"சமயோசித புத்தி சாலச் சிறந்தது"**

| | | |
|---|---|---|
| குடியானவன் | தண்டிக்க | மறுத்துவிட்டாள் |
| திருடன் | உணர்ந்தான் | பைத்தியம் |
| புகுந்தான் | அழைப்பது | கூக்குரலிட்டு |
| அவரைப் பந்தல் | சூழ்ச்சி | புண்ணியவான் |
| ஒளிந்து கொண்டு | கொப்புளித்து | சுட்டிக்காட்டினான் |
| சந்தடி | உமிழ்ந்தான் | மெச்சினார்கள் |
| அடங்கவில்லை | லட்சியம் | தண்டனை |
| கொல்லைப்புறம் | பொறுத்துக்கொண்டு | சமயோசிதபுத்தி |
| அறிந்து | தக்கபடி | விழித்தான் |

## பயிற்சி

### I வினாக்கள்

1. திருடன் எங்கே ஒளிந்து கொண்டிருந்தான்? ஏன் அவ்விதம் அவன் ஒளிய வேண்டும்?
2. திருடனைப் பிடிக்கக் குடியானவன் செய்த சூழ்ச்சி என்ன?
3. அண்டை அயலாரிடம் குடியானவன் கூறியது என்ன?
4. இப் பாடத்தால் நீ அறிவது என்ன?

### II வாக்கிய அறிவு

(i) பின்வரும் வாக்கியங்களைக் கவனி

(1) தம்பீ! வண்ணான் வந்தானா?
(2) தம்பீ! வண்ணான் வந்தான்.

இவற்றுள் முதல் வாக்கியம் கேள்வியாக இருக்கிறது. இரண்டாவது வாக்கியம் கேள்வி இல்லாமல் சாதாரணமாக இருக்கிறது. அதாவது,

முதல் வாக்கியம் வினா வாக்கியம்.
இரண்டாவது வாக்கியம் சாதாரண வாக்கியம்.

(ii) பின்வரும் வாக்கியங்களுக்கு நேராக அவை இன்ன வாக்கியம் என்பதைக் குறிக்க:

1. பசு பால் கொடுத்தது. __________
2. பசு பால் கொடுத்ததா. __________
3. நேற்று மழை பெய்தது. __________
4. நேற்று மழை பெய்ததா. __________
5. அம்மா! பால்காரன் வந்தானா. __________
6. அம்மா! பால்காரன் வந்தான். __________

(iii) பின்வரும் வினா வாக்கியங்களைச் சாதாரண வாக்கியங்களாகவும், சாதாரண வாக்கியங்களை வினா வாக்கியங்களாகவும் மாற்றி எழுதுக:

(1) நீ அங்கே போனாயா.
(2) பூனை எலியைத் துரத்திப் பிடித்தது.
(3) குரங்கு மரத்தின்மேல் ஏறிற்று.
(4) அவன் நாற்காலியை ஒடித்து விட்டான்.
(5) ஆற்றில் நீர் நிறைய ஓடுகிறது.
(6) மரத்தில் பழங்கள் பழுத்து இருக்கின்றனவா.



# 10. வீதி ஒழுங்கு

சிறுவன் : மாமா, அதோ ஒருவர் தெருவின் நடுவில் நடக்கிறவர்களை 'மேடைமேல் ஏறிப் போ!' என்று அதிகாரம் செய்கிறாரே அவர் யார்?

மாமா : அவர் வீதி ஒழுங்கைக் கவனிக்கிற உத்தியோகஸ்தர். நடுத்தெருவில் பலவகையான வண்டிகள் போகிறபடியால் அங்கே நடக்கக் கூடாது என்று எச்சரிக்கை செய்கிறார்.

சிறுவன் : இந்த ரஸ்தாவில் மேடை இருக்கிறது. அதனால் நாம் அதன்மேல் ஏறிப் போகிறோம். சில இடங்களில் மேடை இல்லையே! அந்த இடங்களில் எப்படி நடப்பது?

மாமா : சாலையின் ஓரமாகப் போகவேண்டும்.

சிறுவன் : அதோ பாருங்கள்! மேடை ஓரமாகச் செல்லுகிறவருக்குப் பின்னே ஒரு மோட்டார் சத்தம் போட்டுக் கொண்டு வருகிறது. சமீபத்தில் கார் வந்தபிறகும் கூட அவர் மேடைமேல் ஏறவில்லையே!

மாமா : அவர் இடதுபுற ஓரமாக நடக்கிறார். அதனால் பின்பக்கம் கார் வந்ததைக் அவர் கவனிக்கவில்லை.

சிறுவன் : அவர்மேல் கார் ஏறிவிடாதா ?

மாமா : ஏறிவிடும்; அதனால்தான் அந்த அதிகாரி அவரை மேடைமேல் ஏறச் சொல்லி எச்சரிக்கை செய்கிறார்.

சிறுவன் : சாலையிலேயே நடப்பதாக இருந்தால் எந்தப்புறம் நடக்கவேண்டும்?

மாமா : நமது வலப்புற ஓரத்தில் சென்றால்தான் நல்லது. ஏன் தெரியுமா ? நமது நாட்டில் வண்டிகள் எல்லாம் சாலையின் இடது புறமாகவே செல்லவேண்டும் என்று சர்க்கார் கட்டளை ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதனால் வண்டிகள் எப்பொழுதும் இடது புறமாகவே செல்லும். எதிரே வந்து கொண்டிருக்கும் வண்டிகள் வலது புற ஓரமாக வந்து கொண்டிருக்கும். அவர்கள் வந்து கொண்டிருக்கும் திசையில் அவர்களுக்கு அது இடதுபுறமல்லவா ? ஆதலால் நாம் வலதுபுறமாக நடந்தால் நமக்குப் பின்புறம் வண்டிவராது. எதிரேதான் வந்து கொண்டிருக்கும். அதனால் நமக்கு அபாயம் ஏற்படாது. பார்த்து வழி நடக்கலாம்.

சிறுவன் : இதோ இங்கே எதிரில் மூன்று ரஸ்தாக்கள் காணப்படுகின்றனவே! நாம் எதன் வழியாகச் செல்லவேண்டும் ?

மாமா : நான் முன்னே நாற்சந்தி என்று சொன்னேன் அல்லவா ? அந்த இடம் இதுதான்! நான்கு ரஸ்தாக்கள் இங்கே சேருகிறபடியால் இந்த இடம் நாற்சந்தி எனப்படுகிறது. அதோ அந்த எதிர்ப்புற ரஸ்தாவில்தான் நாம் செல்ல வேண்டும்.

சிறுவன் : அதோ, நடுவில் ஒரு போலீஸ் காரன் நிற்கிருனே : வண்டிகளால் அவனுக்கு அபாயம் ஏற்படாதோ ?



மாமா : அவன் வண்டி களுக்கு வழி காட்டுபவன். வண்டிகள் அவனைச் சுற்றித் தான் செல்லவேண்டும். அதனுல் அவனுக்கு அபாயம் ஏற்படாது.

சிறுவன் : மாமா, ஏன் இந்த வண்டிகள் எல்லாம் போலீஸ் காரன் முன்பாக நின்று விட்டன?

மாமா : போலீஸ்காரன் கையை எப்படித் தூக்கிவைத்துக் கொண்டிருக்கிறுன் பார்! அவனது ஒரு கை இந்த வழியைமறைப்பது போல் காணப்படுகிறது அல்லவா? அப்படி எந்தப் பக்கம் அவன் கையைத் தூக்கி வைத்துக் கொண்டிருக்கிருனே அந்தப் பக்கம் செல்லுகிற வண்டிகள் நின்று விடவேண்டும். அவனுடைய மற்றொரு கையைப் பார்! அம்மாதிரி தூக்கப்பட்ட கையின் பக்கமாக உள்ள வண்டிகள் போகலாம்.



சிறுவன் : இதோ, போலீஸ் காரன் கையை மாற்றித் தூக்கிவிட்டான். நமது பக்கம் உள்ள வண்டிகள் போக ஆரம்பிக்கின்றன. குறுக்காகச் செல்லவேண்டிய வண்டிகள் நின்று விட்டன.

மாமா : ஆம் ; வா சீக்கிரம் போவோம்.

| | | |
|---|---|---|
| மேடை | எச்சரிக்கை | நாற்சந்தி |
| அதிகாரம் | வலது புறம் | எதிர்ப்பக்கம் |
| விதி ஒழுங்கு | இடது புறம் | போலீஸ்காரன் |
| உத்தியோகஸ்தர் | அபாயம் | மறைப்பதுபோல் |
| ரஸ்தா | சர்க்கார் | மாற்றி |
| சாலை | முன்பக்கம் | குறுக்கே |
| ஓரமாக | பின்புறம் | சீக்கிரம் |

பயிற்சி

## I வினாக்கள்

1. சாலையில் எந்தப் பக்கமாகச் செல்லவேண்டும்? ஏன்?
2. போலீஸ்காரன் தெரு ஒழுங்கை எப்படி நடத்துகிறான்?
3. தெருஒழுங்கைக் கவனிக்கும் அதிகாரி செய்யும் வேலை என்ன?
4. மேடை இல்லாத ரஸ்தாக்களில் நடந்து செல்வது எப்படி?

## II பெயர்ச் சொல்லின் அறிவு

பின்வரும் வாக்கியத்தைக் கவனி :

முருகன் கடைத்தெருவிற்குப் போய்ப் பல கடைகளில் நுழைந்து துணிகள், விளக்கு, பூட்டு, பழங்கள் முதலிய சாமான்களை வாங்கிக்கொண்டு வந்தான்.

இந்த வாக்கியத்தில்,

முருகன் என்பது ஒரு மனிதனின் பெயர்.

கடைத்தெரு என்பது ஓர் இடத்தின் பெயர்.

துணிகள், விளக்கு, பூட்டு, பழங்கள்: இவை பொருள்களின் பெயர்கள்.

இவை எல்லாம் பெயர்ச் சொற்கள்.

தெரிந்துகொள் : ஏதாவது ஒன்றின் பெயரைக் குறிக்கும் சொல் 'பெயர்ச்சொல்' எனப்படும்.

இப்படிப் பெயர்களைக் குறிக்கும் சொற்கள் சிலவற்றை நீயே சொல்லு.

## 11. அழகு

நாட்டுக்கு அழகு வளமை.
நாவிற்கு அழகு இன்சொல்.
வீட்டுக்கு அழகு வெளிச்சம்.
வீதிக்கு அழகு ஒழுங்கு.

காற்றுக்கு அழகு மென்மை.
கடலுக்கு அழகு அலைகள்.
ஆற்றுக்கு அழகு ஓட்டம்.
ஆணுக்கு அழகு வீரம்.

பெண்ணுக்கு அழகு கற்பு.
பேச்சுக்கு அழகு உறுதி.
கண்ணுக்கு அழகு கருணை.
கல்விக்கு அழகு அடக்கம்.

ஜலத்திற்கு அழகு சுத்தம்.
சங்குக்கு அழகு வெண்மை.
நிலத்திற்கு அழகு விளைவு.
நெற்றிக்கு அழகு திலகம்.

—குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

## பயிற்சி

### I வினக்கள்

1. நாவிற்கு அழகு எது?
2. கடலுக்கு எது அழகு?
3. கல்விக்கு அழகு எது?

### II ஒருமை பன்மை அறிவு

**பின்கண்ட வார்த்தைகளைக் கவனி:**

| | | | |
|---|---|---|---|
| மரம் | — மரங்கள் | மனிதன் | — மனிதர்கள் |
| பழம் | — பழங்கள் | சிறுவன் | — சிறுவர்கள் |
| பலகை | — பலகைகள் | பெண் | — பெண்கள் |

இவற்றுள் மரம், பழம், பலகை என்பன முறையே ஒவ்வொரு பொருளைக் குறிக்கின்றன. இவ்வாறே மனிதன், சிறுவன், பெண் என்பன ஒவ்வொரு ஆளைக் குறிக்கின்றன.

இவ்வாறு ஒன்றைக் குறிப்பது 'ஒருமை' எனப்படும்.

மரங்கள், பழங்கள், பலகைகள் என்னும் சொற்கள் பல பொருள்களைக் குறிப்பதைக் கவனி. மனிதர்கள், சிறுவர்கள், பெண்கள் என்பன பல பேர்களைக் குறிக்கின்றன.

இவ்வாறு பலவற்றைக் குறிப்பன 'பன்மை' எனப்படும்.

ஒருமைச் சொற்கள் சில கூறு.

பன்மைச் சொற்கள் சில கூறு.

பின்கண்ட ஒருமைச் சொற்களுக்குப் பன்மைச் சொற்களைக் கூறு.

| | | |
|---|---|---|
| 1. புத்தகம் | 4. குரங்கு | 7. நாற்காலி |
| 2. மேஜை | 5. நாய் | 8. சிறுமி |
| 3. பேனா | 6. பூனை | 9. பூட்டு |

பின்கண்ட பன்மைச் சொற்களுக்கு ஒருமைச் சொற்களைக் கூறு.

| | | |
|---|---|---|
| 1. படகுகள் | 4. கோழிகள் | 7. சாவிகள் |
| 2. கப்பல்கள் | 5. காக்கைகள் | 8. குடைகள் |
| 3. வீடுகள் | 6. பாம்புகள் | 9. பெட்டிகள் |



## 12. பனிப் பிரதேச மக்கள்

நாம் இருக்கும் இடத்திற்கு வெகு தூரத்திற்கு அப்பால், ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால், மிகக் குளிர்ந்த பிரதேசம் இருக்கிறது. அங்கே தரை எல்லாம் பனிக்கட்டியாகவே இருக்கும். அதனால் அந்தப் பிரதேசத்திற்குப் **பனிப் பிரதேசம்** என்று பெயர். அங்கே நமது நாட்டைப் போல் பெரிய பட்டணங்களைப் பார்க்க முடியாது. அங்கங்கே சிறு சிறு கிராமங்கள்தான் காணப்படும்.

அங்கே உள்ள வீடுகள் பனிக்கட்டியால் கட்டப்பட்டவை. இந்த வீட்டிற்கு **இக்லூ** என்று பெயர். இதன்மேல் சிறிய புகைப்போக்கி இருக்கிறது உள்ளே மேஜை நாற்காலி போன்ற பொருள்கள் ஒன்றும் இருக்காது. இவ்வீடுகள் பனிக்கட்டியால் கட்டப்பட்டிருந்தாலும் உள்ளே குளிர் அதிகம் கிடையாது?

பனிப் பிரதேசம் மிகவும் குளிர்ச்சியானது. இங்கே நாம் சட்டை முதலியன போட்டுக் கொள்ளாமல் இருப்பதுபோல் அங்கே இருக்கமுடியாது.

இங்கே நாம் உபயோகிக்கிற பருத்தி, பட்டு உடைகள் அங்குள்ள குளிரைத் தாங்கமாட்டா. சிறந்த கம்பளி உடைகள்தான் அங்கேயுள்ள குளிரைத் தாங்கும்.

பனிப் பிரதேசத்தில் நம் நாட்டைப்போல் ஆடு மாடுகள், குதிரை, கழுதை முதலியவைகளைக் காணமுடியாது. அங்கே சடை நாய்கள் மிகுதியாக இருக்கின்றன. அவை வண்டி இழுக்க உதவுகின்றன. இவ்வித வண்டிக்கு ஸ்லெட்ஜ் என்று பெயர். அந்த வண்டி எப்படி இருக்கிறது? அதற்குச் சக்கரங்கள் கிடையாது. வண்டியின் அடியில் உள்ள இரண்டு நீண்ட சட்டங்கள் பனிக்கட்டியின் மீது வழுக்கிச் சறுக்கிச் செல்லு



கின்றன. இவ்வித வண்டிகளை அங்கே காணப்படும் ஒரு வித மான்களும் இழுப்பது உண்டு. அந்த மான் ரெயின்டீர் எனப்படும். அவ்வாறு வண்டி யிழுப்பதைப் படத்தில் பார்!

பனிப் பிரதேசத்தில் வசிப்பவர்களில் இரு வகையினர் உள்ளனர். ஒரு வகையினருக்கு **'லாப்ஸ்'** என்று பெயர். இவர்கள் வசிக்கும் இடத்திற்கு **லாப்லாந்து** என்று பெயர். மற்றொரு வகையினர் **'எஸ்கிமோஸ்'** என்று அழைக்கப் படுகிறார்கள். இவர்கள் வசிக்கும் இடம் **கிரீன்லாந்து** எனப்படும்.

இந்த இரண்டு வகையார்களும் பழக்க வழக்கங்களில் ஏறக் குறைய ஒரே மாதிரிதான் இருக்கிறார்கள்.

இவர்கள் அங்கே உள்ள பிராணிகளை வேட்டையாடி ஜீவிக்கிறார்கள். அப்பிராணிகளின் மாமிசம் இவர்களுக்கு உணவு ஆகிறது; பிராணிகளின் கொழுப்பு விளக்கு எரிய உபயோகமாகிறது; அவற்றின் தோல் இவர்களுக்கு உடையாக உதவுகிறது. மான் பாலும் இவர்களுக்குச் சிறந்த உணவுப் பொருள் ஆகும்.

பனிப் பிரதேசத்தில் உள்ளவர்களுக்கு முக்கியமான உணவாக இருப்பது சீல் என்னும் ஒரு வகைக் கடற் பிராணியாகும். அது நீரிலும் நிலத்திலும் வசிக்கும். அங்குள்ள ஜனங்கள் அதை வேட்டையாடிப் பிடிக்கிறார்கள்.

| | | |
|---|---|---|
| பனிப் பிரதேசம் | உடைகள் | எஸ்கிமோ |
| இக்லூ | கம்பளி | லாப்லாந்து |
| பனிக் கட்டி | ஸ்லெட்ஜ் | கிரீன்லாந்து |
| குளிர்ச்சியானது | வழுக்கி | கொழுப்பு |
| பருத்தி | சறுக்கி | சடை நாய் |
| பட்டு | லாப்ஸ் | சீல் |

## பயிற்சி

### 1 வினாக்கள்

1. பனிப் பிரதேசம், எங்கு உள்ளது?
   அந்தப் பிரதேசம் எப்படி இருக்கும்?
2. பனிப் பிரதேச மக்கள் எப்படி ஜீவிக்கிறார்கள்?
3. பனிப் பிரதேச மக்களின் பெயர் என்ன?
   அவர்கள் எங்கு வசிக்கிறார்கள்?
4. பனிப் பிரதேச மிருகங்கள் யாவை?

### 11 ஒருமை பன்மை அறிவு

இந்தப் பாடத்தில் வந்துள்ள ஒருமை, பன்மைச் சொற்கள் ஒவ்வொன்றிலும் ஐந்து எழுது.

# 13. கைத்தொழில்கள்

எங்கள் பள்ளிக்கூடம் ஓர் ஆதாரக் கல்விப் பாடசாலை. எங்களுக்குக் கல்வியுடன் கைத் தொழில்களையும் கற்பிக்கிறார்கள். படிக்கும் பொழுதே கைத்தொழில்களையும் பழக்கிக் கொண்டால் நமது பிற்கால வாழ்க்கைக்கு நல்லதல்லவா? இந்தக் கருத்தைக்கொண்டே எங்களுக்குக் கைத் தொழில்களையும் பள்ளிக்கூடத்திலேயே கற்பிக்கிறார்கள். நாங்களும் விருப்பமாகக் கைத்தொழில் களைக் கற்றுக்கொள்கிறோம்.

எங்கள் பாடசாலையில் **நூல் நூற்றல்** மிகவும் முக்கியமாகக் கவனிக்கப்படுகிறது. நாங்கள் எல் லோரும் தக்ளியாலும் சர்க்காவாலும் நன்றாக நூற்போம். பெரிய வகுப்பு மாணவர்கள் வெகு வேகமாகவும் மிகச் சன்னமாகவும் நூற்பார்கள். நாங்களும் மெல்லிய நூல் நூற்க நன்றாகப் பழகி வருகிறோம். நாங்கள் நூற்ற நூலைக்கொண்டு நாங்களே **துணி நெய்கிறோம்**. எங்கள் பள்ளிக் கூடத்தில் ஐந்து தறிகள் இருக்கின்றன. சிற்சில நாட்களில் எனக்கும் தறியில் பயிற்சி அளிப் பார்கள்.

எங்கள் ஆசிரியர்களுள் ஒருவர், கையினால் **காகிதம்** செய்வதில் கைதேர்ந்தவர். காகிதக் கூழ் தயார் செய்வதில் எங்களுக்கு நல்ல பயிற்சி கொடுத்திருக்கிறார். சில நாட்களில் நான்கூட சட்டத்தை வைத்துக் காகிதம் எடுப்பேன். ஆனால் அவ்வளவு சுத்தமாக இருக்காது. ஒழுங்காக மேடு பள்ளமில்லாமல் காகிதம் எடுக்கப் பழகி வரு கிறேன்.

எங்களுள் சில மாணவர்களுக்குத் தச்சுவேலையில் பயிற்சி அளிக்கப்படுகிறது. எங்கள் பாடசாலையில் இருக்கும் பலகைகள் அவ்வளவும் மாணவர்களே இழைத்தவை. சிறிய பெட்டிகள், பெஞ்சிகள், மேஜை முதலியவற்றைக்கூட மாணவர்களே செய்து வருகிறார்கள். உளியைக் கையில் பிடித்துக்



கொட்டாப்புளியால் வெகு கவனமாக மரத்தைச் செதுக்குகிறார்கள். ஒரு நூலிழை தவறினாலும் விரலே போய்விடும்! வெகு ஜாக்கிரதையாக வேலை செய்கிறார்கள்.

ஈச்சம்பாய், தாழம்பாய் பின்னுதல் எங்க ளுக்கு வெகு சாதாரணம். பாய் பின்னத் தெரியாத மாணவனே எங்கள் பாடசாலையில் இல்லை என லாம். தலைமை ஆசிரியர் அறையின் தரை முழுவ தற்கும் நாங்கள் பின்னிய பாயைத்தான் விரித் திருக்கிறோம்.

எங்களுக்குக் கூடை முடைவதிலும் நல்ல பயிற்சி உண்டு. பெரிய கூடைகளை நாங்களே செய்து ஒவ்வொரு வகுப்பிலும் வைத்திருக்கிறோம். வகுப்பில் சேரும் குப்பை கூளங்களை அதில்தான் அள்ளிப்போடுவோம். சிற்சில சமயம் எங்களிடம் அதிகக் கூடைகள் சேர்ந்துவிடும். அவற்றை விற்றுவிடுவோம். விற்றுவந்த பணத்தினல் கைத்தொழிலுக்கு வேண்டிய சில கருவிகளை வாங்கிக்கொள்ளுவோம். எங்கள் பாடசாலையில் கற்றுக்கொடுக்கும் அத்தனை கைத்தொழில் களையும் கற்றுக்கொள்ள எனக்கு மிகுந்த விருப்பம்.

| | | |
|---|---|---|
| ஆதாரக்கல்வி | மாணவர்கள் | தச்சுவேலை |
| கற்பிக்கிறார்கள் | சன்னமாக | இழைத்தவை |
| கைத்தொழில்கள் | நெய்கிறோம் | கொட்டாப்புளி |
| நூற்றல் | தறிகள் | நூலிழை |
| தக்ளி | அளிப்பார்கள் | பின்னுதல் |
| சர்க்கா | காகிதக்கூழ் | முடைவதில் |

பயிற்சி

வினக்கள்

1. கைத்தொழில்களைப் பள்ளிக்கூடங்களில் ஏன் கற்பிக்கிறார்கள் ?
2. பாடசாலையில் என்னென்ன கைத்தொழில்களில் பயிற்சி அளிக்கப்படுகிறது ?
3. மாணவர்கள் தாம் செய்த கூடைகளை என்ன செய்கிறார்கள் ?

# 14. தென்னை மரம்

தென்னைமரத்தை நீங்கள் எல்லோரும் பார்த்திருக்கிறீர்கள். வீட்டுத் தோட்டங்களிலும், பள்ளிக்கூடத் தோட்டங்களிலும் அவை வளர்ந்திருக்கின்றன அல்லவா? அவை மணற்பாங்கான இடத்தில் செழிப்பாக வளரும். அதனால் ஆற்றங்கரை ஓரங்களிலும் கடற்கரைப் பிரதேசங்களிலும் அவற்றை அதிகமாகக் காணலாம்.





தென்னை மரம் ஐம்பது அல்லது அறுபது அடி உயரம் வளரும். அதற்குக் கிளைகள் கிடையா. கிளைகள் போல் மேலே காணப்படுபவைகளுக்கு **மட்டைகள்** என்று பெயர். மட்டையின் இருபுறங்களிலும் இருக்கும் இலைகள் **ஓலைகள்** என்று சொல்லப்படும்.



தென்னை மரத்தின் காயைத் **தேங்காய்** என்று சொல்லுகிறோம். தேங்காய்கள் மரத்தின்மேல் குலை

குலையாய்க் காய்க்கின்றன. முற்றாத காய்க்கு **இளநீர்** என்று பெயர். முற்றின காயே தேங்காய் என்று சொல்லப்படும்.



தேங்காயின் மேல், மட்டை மூடிக்கொண்டு இருக்கிறது. மட்டையை உரித்துத் தேங்காயை எடுக்க வேண்டும். தேங்காயை உடைத்தால் உள்ளே ஓட்டைச்சுற்றி வெண்மையான **பருப்பு** இருப்பதைக் காணலாம். தேங்காயின் ஓடு **கொட்டாங்கச்சி** எனப்படும். நன்றாக முற்றின தேங்காயைக் **கொப்பரை** என்று சொல்லுகிறோம்.

தென்னைமரம் நமக்குப் பலவகையில் பயன் படுகிறது. தேங்காய்ப் பருப்பு சமையலுக்கு உபயோகப் படுகிறது. கொப்பரையைச் செக்கில் இட்டு ஆட்டி எண்ணெய் எடுக்கிறார்கள். இந்த எண்ணெய் **தேங்காய் எண்ணெய்** என்று சொல்லப் படும். தேங்காய் எண்ணெயில் பலகாரங்கள் செய்யப்படுகின்றன. இன்னும் சோப்பு, மெழுகு வர்த்தி முதலியனவும் அதனால் செய்யப்படுகின்றன.

தென்னை ஓலையைக் கீற்றாக முடைந்து வீடுகளுக்குக் கூரை வேய உபயோகிக்கிறார்கள். மரத்தைப் பிளந்து, கூரைக்கு விட்டங்களாக உபயோகிக்கிறார்கள் மட்டைகளை அடுப்பு எரிக்கிறார்கள். கொட்டாங்கச்சிகள் அகப்பை செய்ய உதவுகின்றன. மட்டையிலிருந்து நார் எடுத்துக் கயிறு திரிக்கிறார்கள். இன்னும் அதனால் கால்மிதி, விரிப்பு முதலியனவும் செய்கிறார்கள். தென்னைமரம் இப்படிப் பல வகையில் நமக்கு உதவுகிறது.

| | | | |
|---|---|---|---|
| வளர்ந்திருக்கின்றன | | ஓலை | கொட்டாங்கச்சி |
| மணற்பாங்கான | | இளநீர் | சமையலுக்கு |
| செழிப்பாக | | தேங்காய் | எண்ணெய் |
| காணப்படுபவை | | கொப்பரை | பலகாரங்கள் |
| மட்டை | | பருப்பு | கூரை வேய்தல் |
| விட்டம் | கால்மிதி | விரிப்பு | சோப்பு |

## பயிற்சி

### I வினாக்கள்

1. தென்னை மரம் எப்படி இருக்கும்?
2. தென்னை மரங்கள் எங்கே செழித்து வளரும்?
3. மட்டை, கொப்பரை, இளநீர்: இவை யாவை?
4. தென்னை மரம் நமக்கு எப்படிப் பயன்படுகிறது?
5. தேங்காய் எதெதற்குப் பயன்படுகிறது?

### II ஆண்பால் பெண்பால் அறிவு

மௌன வாசிப்பு

| ஆண் | பெண் | ஆண் | பெண் |
|---|---|---|---|
| அப்பா | அம்மா | பாட்டன் | ——— |
| தந்தை | தாய் | ——— | கிழவி |
| மகன் | மகள் | அழகன் | ——— |
| சிறுவன் | சிறுமி | அவன் | ——— |
| கணவன் | மனைவி | ——— | குமரி |

பின்வரும் வாக்கியங்களில் ஆண்பால் வார்த்தைகளைப் பெண்பால் வார்த்தைகளாகவும், பெண்பால் வார்த்தைகளை ஆண்பால் வார்த்தைகளாகவும் மாற்றி எழுது:

1. அந்தச் சிறுவன் அந்தச் சிறுமியை அடித்தான்.
2. என் தந்தை வெளியில் போயிருக்கிறார்.
3. என் தாயார் வீட்டில் இருக்கிறாள்.
4. எங்கள் பாட்டனார் நூல் நூற்பார்; பாட்டி கதை சொல்லுவாள்.

பின்வருவனவற்றை வாசி; அடுத்த கட்டத்தில் அது போல் எழுது:

# 15. புத்தி கூர்மை

**விஜயநகரம்** என்பது முன்காலத்தில் மிகப் பெரிய பட்டணமாக இருந்தது. அங்கே ஒரு பணக்காரர் வாழ்ந்துவந்தார். அவருக்கு மூன்று பிள்ளைகள் இருந்தார்கள். அவருக்குப் பல வீடு களும், ஏராளமான நில புலங்களும் இருந்தன. இன்னும், பல குதிரைகளும் யானைகளும்கூட அவரிடம் இருந்தன.

வயது சென்ற அந்தச் சீமான் ஒரு நாள் இறந்துபோனார். இறப்பதற்கு முன்பு அவர், தம் சொத்துக்களைத் தம் பிள்ளைகள் தனித் தனி இவ்வளவு அடையவேண்டும் என்று ஏற்பாடு செய்திருந்தார். அதன்படி யானைகளைத் தவிர மற்றச் சொத்துக்கள் சிக்கல் இல்லாத முறையில் பங்கிடப்பட்டு விட்டன. யானைகளைப் பங்கிடும் வகையில் மட்டும் சிக்கல் உண்டாயிற்று.

பங்கிடுவதற்கு உரிய யானைகள் பதினேழு; அதில் மூத்த மகன் பாதி அடையவேண்டும். இரண்டாவது பிள்ளை மூன்றில் ஒரு பங்கு பெற வேண்டும்; மூன்றுமவன் ஒன்பதில் ஒரு பங்கு அடையவேண்டும். இவ்விதம் பங்கிட்டுக்கொள்ள முடியாமல் அவர்கள் திகைத்தார்கள்.

அந்தக் காலத்தில் விஜய நகரத்தைக் **கிருஷ்ண தேவராயர்** என்னும் அரசர் ஆண்டுவந்தார். அவருக்கு அப்பாஜி என்று ஒரு மந்திரி உண்டு. அந்த மந்திரி மிகவும் புத்திகூர்மை உள்ளவர். சகோதரர்கள் மூவரும் அவரிடம் போய்ச் சொல்லித் தங்களுக்கு அந்த யானைகளை முறைப்படி பங்கிட்டுக்கொடுக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அவர் சிறிது யோசனை செய்தார். மறுநாள் வந்து பங்கிட்டுத் தருவதாகச் சொன்னார்.

மறுதினம் அப்பாஜி ஒரு யானைமேல் ஏறிக் கொண்டு அவர்கள் வீட்டை அடைந்தார்.

அந்தப் பதினேழு யானைகளையும் வரிசையாக நிற்க வைத்துத் தம் யானையை அவற்றோடு சேர்த்து நிற்கச் செய்தார். "பிள்ளைகளே, இப்போது உங்கள் கணக்கின்படி நீங்கள் பங்கிட்டுக் கொள்ளலாம்" என்றார்.



'பதினேழு யானைகளைப் பங்கிட முடியாத காரணத்தால் அப்பாஜி தம் யானையையும் சேர்த்து அவர்களுக்குக் கொடுக்கத் தீர்மானித்து இருக்கிறார்' என்று எல்லோரும் எண்ணினார்கள். பிள்ளைகள் 'அப்பாஜியின் யானையும் தங்களுக்குக் கிடைக்கப் போகிறது' என்று உத்தேசித்தார்கள்; பங்கிட்டுக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

மூத்தவன் பதினெட்டில் பாதி ஆகிய ஒன்பது யானைகளை எடுத்துக்கொண்டான். இரண்டாமவன் மூன்றில் ஒன்றாகிய ஆறு யானைகளை ஒதுக்கிக்கொண்டான். மொத்தம் பதினைந்து போயிற்று. கடைசிப்பிள்ளை ஒன்பதில் ஒரு பங்காகிய இரண்டு யானைகளை எடுத்துக்கொண்டான்.

அவர்களுக்குச் சொந்தமான பதினேழு யானைகளும் பங்கிடப்பட்டன. மீதி அப்பாஜியின் யானை மட்டும் அப்படியே நின்றது.

சிக்கல் இல்லாமல் இவ்விதம் சுலபமாக யானைகள் பங்கிடப்பட்டதைக்கண்டு எல்லோரும் ஆச்சரியம் அடைந்தார்கள். அப்பாஜி அவர்களிடம் விடை பெற்றுக்கொண்டு தம் யானைமீது ஏறிச் சென்றார்.

நுட்ப புத்தியால் எப்படிப்பட்ட சிக்கலான காரியமும் எளிதில் கை கூடும்.

| | | |
|---|---|---|
| புத்தி கூர்மை | அடையவேண்டும் | பங்கிட்டுக்கொள்ள |
| சீமான் | பெறவேண்டும் | மறுதினம் |
| நிலபுலங்கள் | சிக்கல் | காரணத்தால் |
| இறந்துபோனர் | முறை | தீர்மானித்து |
| இறப்பதற்கு | பாதி | சொந்தமான |
| தனித்தனி | மூன்றுமவன் | விடைபெற்று |
| மூத்தவன் | நுட்பபுத்தி | கைகூடும் |

### பயிற்சி

#### I வினுக்கள்

1. யானைகளை எவ்விதமாய் பங்கிடவேண்டியிருந்தது?
2. அப்பாஜி எவ்விதம் பங்கிட்டார்?
3. இந்தக் கதையால் அறியப்படுவது யாது?

#### II ஒருமை பன்மை அறிவு

**பின் வருபவைகளை கவனி :**

யானை - யானைகள் சிறுவன் - சிறுவர்கள்
பிள்ளை - பிள்ளைகள் சிறுமி - சிறுமிகள்

இவற்றுள் யானை, பிள்ளை, சிறுவன், சிறுமி என்பன தனித்தனி ஒவ்வொரு பொருளைக் குறிக்கின்றன. இவ்வாறு ஒரு தனிப்பொருளைக் குறித்தால் அது ஒருமை எனப்படும்.

யானைகள், பிள்ளைகள், சிறுவர்கள், சிறுமிகள், இவை, தனித்தனி பல பொருள்களைக் குறிக்கின்றன. இவ்வாறு பல பொருள்களைக் குறித்து வருவன பன்மை எனப்படும்.

# 16. எங்கள் தமிழ்

இனிமைத் தமிழ் மொழி எமது - எமக்
கின்பம் தரும்படி வாய்த்தநல் அமுது!
கனியைப் பிழிந்திட்ட சாறு - எங்கள்
கதியில் உயர்ந்திட யாம்பெற்ற பேறு!
தனிமைச் சுவையுள்ள சொல்லை - எங்கள்
தமிழினும் வேறெங்கும் யாம்கண்ட தில்லை!
நனியுண்டு நனியுண்டு காதல் - தமிழ்
நாட்டினர் யாவர்க்கு மேதமிழ் மீதில்!
தமிழ் எங்கள் உயிர்என்ப தாலே - வெல்லும்
தரமுண்டு தமிழருக் கிப்புவி மேலே!
தமிழ் என்னில் எம்முயிர்ப் பொருளாம் - இன்பத்
தமிழ்குன்றுமேல் தமிழ் நாடெங்கும் இருளாம்!
தமிழுண்டு தமிழ் மக்க ளுண்டு - இன்பத்
தமிழுக்கு நாளும் செய்வோம் நல்ல தொண்டு!
தமிழ் என்று தோள்தட்டி ஆடு! - நல்ல
தமிழ் வெல்க வெல்க என்றே தினம் பாடு!

—பாரதி தாசன்

தமிழ்நாடு
600 008
147819
TB 031(3) NS0

# 17. அற்புத விளக்கு I

பெகிங் என்னும் நகரில் அலாவுதீன் என்று ஒரு சிறவன் இருந்தான். அவன் தந்தையின் பெயர் முஸ்தபா. அவர் இறந்து போய்விட்டார். அந்தக் குடும்பத்தார் மிகவும் ஏழைகள். அவன் தாயார் ஜீவனத்திற்காகக் கஷ்டப்பட்டு வேலே செய்து வந்தாள்.

அலாவுதீன் விளையாட்டில் மிகவும் ஆசை உடையவன். படிப்பில் அவன் கவனம் செல்லவில்லை. வேளா வேளைக்கு வந்து சாப்பிடுவதும் மற்ற நேரங்களில் விளையாடுவதும்தான் அவனது வேலைகள். அவன் தாயார் அவனைப் பல விதங்களில் திருத்த முயன்றும் முடியவில்லை.

ஒரு நாள் அலாவுதீன் விளையாடிக்கொண்டு இருந்தபொழுது முன்பின் தெரியாத ஒருவர் அவனிடம் வந்தார். அவர் ஒரு மந்திரவாதி. அந்தச் சிறுவனால் ஒரு முக்கியமான காரியத்தைச் சாதித்துக்கொள்ள அவர் எண்ணினார். அதற்காக அவர் அக்குடும்பத்தாருடன் சிநேகம் செய்து கொள்ளத் தீர்மானித்தார். அக்கம்பக்கத்தில் அவர்களுடைய வரலாற்றை விசாரித்துத் தெரிந்து கொண்டிருந்தார். அவர் அலாவுதீனைப் பார்த்து "தம்பீ, நீ முஸ்தபாவின் மகன் தானே?" என்றார். அலாவுதீன் "ஆம்" என்றான். பிறகு அவர் "நான் உன் சிற்றப்பன். நீண்ட நாளாகத் தூரதேசம் போயிருந்தேன். இப்போதுதான் திரும்பி வந்தேன்! உன் தந்தை சுகமா?" என்றார்.

அலாவுதீன் 'தந்தை இறந்துவிட்டார்' என, மந்திரவாதி மிகவும் துக்கப்படுபவர்போல்

பாசாங்கு செய்தார். பிறகு இருவரும் வீடு சென்றனர். அலாவுதீனுக்குச் சிற்றப்பா உண்டு என்பதை அவன் தாயார் அதுவரை அறிந்ததில்லை. ஆனாலும் மந்திரவாதியின் தந்திர வார்த்தைகளால் அதை அவள் நம்பினாள். அலாவுதீனுக்கும் அவன் தாயாருக்கும் தன்னிடம் நம்பிக்கை உண்டாகும்படி மந்திரவாதி நடந்துகொண்டார். அலாவுதீனுக்குத் தின்பண்டங்கள் வாங்கிக் கொடுத்தார்; வீட்டிற்கு வேண்டிய சில சாமான்களையும் துணிமணிகளையும் வாங்கிக் கொடுத்தார். அவர்களிடம் அன்பாகப் பழகினார்.

பிறகு ஒரு நாள் "வா வெளியில் சென்று உலாவி விட்டு வரலாம்" என்று சொல்லி அலாவுதீனை அழைத்துச் சென்றார். நீண்டதூரம் சென்றபின் இருவரும் ஒரு மலையின் அடிவாரத்தை அடைந்தார்கள். அங்கே சிறிது உட்கார்ந்து இளைப்பாறிய பிறகு, மந்திரவாதி ஏதோ மந்திரத்தை உச்சரித்துத் தன்னிடம் இருந்த ஒரு சிமிழிலிருந்து ஏதோ ஒரு பொடியை எடுத்து மலைப்பக்கம் வீசினார்.

உடனே மலையின் ஒருபுறம் திறந்துகொண்டது. அங்கு தரையில் ஒரு குகை காணப்பட்டது. குகைக்குள் செல்ல, படிகளும் இருந்தன. அலாவுதீன் பயந்து நடுங்கினான். மந்திரவாதி "அப்பா, பயப்படாதே; இங்கே அபாயம் ஒன்றும் கிடையாது. இந்தப் படிகளின் வழியாக இறங்கிச் செல். முதலில் ஒரு தோட்டம் இருக்கும். அப்பால் ஓர் அரண்மனை இருக்கிறது. அதன் வாசல் கதவைத் திறந்து உள்ளே சென்றால் ஒரு பெரிய கூடம் உண்டு. அங்கே குவியல் குவியலாக இரத்தினக் கற்கள் இருக்கின்றன. அவற்றில் உனக்கு வேண்டிய அளவு நீ எடுத்துக்கொள்ளலாம்.

அங்கே மாடத்தில் ஒரு விளக்கு இருக்கும். அதை எடுத்துவநது என்னிடம் கொடு!'' என்றார்.

அலாவுதீன் பின்னும் பயந்தவன்போல் காணப்பட்டான். உடனே மந்திரவாதி, "இந்தா, இந்த மந்திர மோதிரத்தை அணிந்துகொள். இது ஆபத்திலிருந்து உன்னைக் காப்பாற்றும். தைரியமாக இறங்கிச் செல்!'' என்றார். உடனே அலாவுதீன் தைரியம் அடைந்து, படிக்கட்டின் வழியாகக்



கீழிறங்கிச் சென்றான். தோட்டத்தைக் கடந்து கூடத்தை அடைந்து இரத்தினக் கற்களை வேண்டிய அளவு எடுத்துச் சட்டைப்பைக்குள் போட்டுக்கொண்டான். விளக்கை எடுத்து மடியில் கட்டிக்கொண்டு திரும்பி வந்தான்.

அலாவுதீனைக் கண்டதும் மந்திரவாதி விளக்கைத் தரும்படி கேட்டார். "விளக்கை இடுப்பில் கட்டியிருக்கிறேன். முதலில் என்னைத் தூக்கி வெளியே விடுங்கள்; விளக்கைத் தருகிறேன்'' என்றான் சிறுவன். மந்திரவாதி 'முன்னே

விளக்கைக் கொடு' என்றார். சிறுவன் 'மாட்டேன்' என்று கூறவே, மந்திரவாதி கோபங்கொண்டு ஏதோ மந்திரம் உச்சரித்தார். உடனே குகை வாயில் மூடிக்கொண்டது. குகைக்குள் அலாவுதீன் அகப்பட்டுக் கொண்டான்.

| | | |
|---|---|---|
| **ஜீவனத்திற்காக** | **சிற்றப்பன்** | **சிமிழ்** |
| **கவனம்** | **தூரதேசம்** | **குகை** |
| **முயன்றும்** | **தந்திரவார்த்தை** | **அரண்மனை** |
| **மந்திரவாதி** | **துணிமணிகள்** | **கூடம்** |
| **சாதித்துக்கொள்ள** | **பழகினார்** | **குவியல்** |
| **அக்கம்பக்கத்தில்** | **மந்திரத்தை** | **இரத்தினக்கற்கள்** |
| **விசாரித்து** | **உச்சரித்து** | **கட்டிக்கொண்டு** |

பயிற்சி

I வினாக்கள்

1. மந்திரவாதி அலாவுதீன் குடும்பத்தாரோடு எவ்வாறு சிநேகமானான் ?
2. மந்திரவாதி அலாவுதீனை எங்கு அழைத்துச் சென்றான் ?
3. மலைக் குகையில் அலாவுதீன் கண்டது என்ன ?
4. குகையில் அலாவுதீன் அகப்பட்டுக் கொண்டது எப்படி ?

II வினைச்சொல் அறிவு

**பின்வரும் வாக்கியங்களைக் கவனி :**

1. கோபாலன் கடைக்குச் சென்றான்.
2. பசு புல்லை மேய்கிறது.

இவ்வாக்கியங்களில் சென்றான் என்பது கோபாலன் செய்த தொழிலைக் குறிக்கிறது.

மேய்கிறது என்பது பசு செய்த தொழிலைக் குறிக்கிறது.

இவ்வாறு ஏதாவது ஒன்றின் தொழிலைக் குறிக்கும் சொல் **வினைச்சொல்** எனப்படும்.

# 18. மழை பெய்வது எப்படி?

மழை பெய்வதை நீங்கள் அடிக்கடி பார்க்கிறீர்கள். அப்போது வானத்திலிருந்து தண்ணீர் துளி துளியாகவும் தாரை தாரையாகவும் விழுகிறது. சாதாரணமாக வானத்தில் நீர் கிடையாது. மழை பெய்யும்போது அங்கே நீர் எப்படி வந்தது? நீர், மேகத்திலிருந்து விழுகிறது என்று சுலபமாகச் சொல்லிவிடுவீர்கள்! மேகம் எப்படி



வானத்தில் வந்தது? இதை அவ்வளவு சுலபமாக உங்களால் சொல்ல முடியாது. அதைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள்.

மேகங்கள் ஆகாயத்தில் அங்கும் இங்கும் மழை பெய்யாதபோதும் செல்லுகின்றன. அந்த மேகங்கள் வெண்மையாய்ப் புகைபோல் இருக்கின்றன. இப்போது ஓர் உதாரணம் காட்டுகிறேன். பாருங்கள்! இந்தப் பாத்திரத்தில் உள்ள

நீரை அடுப்பில் வைத்துக் காய்ச்சுவோம். இதிலுள்ள குழாய் வழியாக என்ன வருகிறது பாருங்கள்! வெண்மையான புகை வருகிறது அல்லவா? காய்ச்சுவதற்கு முன் இந்தப் புகை இதற்குள்



இருந்ததா? இப்போது மட்டும் எப்படி வந்தது? ஜலத்தைக் காய்ச்சினேம், வந்தது, அல்லவா? இதனுல் ஜலம் உஷ்ணம் அடைந்தால், அது புகைபோல இப்படி மாறி விடும் என்று தெரிந்துகொள்ளுகிறேம். இவ்வாறு மாறிய இந்தப் பொருளுக்கு **நீராவி** என்று பெயர். ஆறு, ஏரி, குளம், சமுத்திரம் இவற்றிலுள்ள நீர், சூரிய உஷ்ணத்தால் ஆவியாக மாறுகிறது. இந்த நீராவி இலேசானது. மேலே ஆகாயத்தில் உயரச் செல்லுகிறது. ஏரி, சமுத்திரம் முதலியவற்றிலிருந்து ஏராளமான ஜலம் ஆவியாகி மேலே சென்றுவிடுகின்றன. அங்கே அந்த நீராவி எல்லாம் ஒன்று சேர்ந்து தங்கும். அதுவே வானத்தில் புகைபோல நமக்குத் தெரிகிற **மேகம்!**



மேகம், நீராக எப்படி மாறுகிறது என்பதை கவனிப்போம். இந்தப் பாத்திரத்தின் குழாய்க்கு எதிரில் ஆவிவருகிற இடத்தில் ஒரு கற்பலகையைப் பிடிப்போம். ஆவி இந்தப் பலகையில் படுகிறதல்லவா? இப்போது என்ன மாறுதலைக் காண்கிறீர்கள்? பலகையிலிருந்து நீர்த்துளிகள்

வழிந்து சொட்டுகின்றன. நீராவி பலகையின் மீது பட்டது; அது தண்ணீராக மாறிற்று; அந்தத் தண்ணீர்தான் இப்படி வழிந்து சொட்டு கிறது என்று கூறலாம் அல்லவா?

வானத்தில் தோன்றிய மேகம் எப்படி மழையாக, அதாவது நீர்த்துளிகளாக, மாறிக் கீழே விழுகிறது? வானத்தின் உயரத்தில் குளிர்ச்சி மிகவும் அதிகம். கற்பலகையும் ஒரு குளிர்ந்த பொருள். ஆனதால் பாத்திரத்தினின்று தோன்றிய ஆவி, குளிர்ச்சியான கற்பலகையின்மீது பட்டதும், மறுபடியும் தண்ணீராக மாறிவிட்டது. அதுபோலவே உயரச்சென்ற மேகமாகிய நீராவியும் அங்கே குளிர்ச்சியடைந்து மறுபடியும் தண்ணீராக மாறிவிட்டது. நீராவி இலேசான பொருள் ஆகையால் உயரத்தில் தங்கியிருந்தது. தண்ணீர் கனமான பொருள் ஆகையால் உயரத்திலிருந்து கீழே விழுகிறது. இப்படி விழும் நீர்த்துளிகளைத் தான் மழை என்கிறோம்.

மழை நமக்கு மிகவும் உபயோகமானது. மழை பெய்யாவிட்டால் உலகில் தண்ணீரே இருக்காது. ஆறு, குளம், குட்டைகள் எல்லாம் வறண்டு இருக்கும். மனிதர்களும் பிராணிகளும், தாவரங்களும் உயிர்வாழ முடியாது. மழை, வயல்களில் பெய்து தானியங்களை விளையச்செய்கிறது. ஏரி குளங்களில் விழுந்து குடிக்கவும் குளிக்கவும் நீரைக் கொடுக்கிறது.

இவ்வாறு மழை நமக்குப் பலவிதங்களில் மிகவும் உபயோகமானதாகவும் முக்கியமானதாகவும் இருக்கிறது.

மழை மன்னுயிர்க்கெல்லாம் இனிது.
மழை இன்றேல் மாநிலம் இல்லை.

| | | | |
|---|---|---|---|
| மழை | பாத்திரத்தில் | சமுத்திரம் | வழிந்து |
| பெய்வது | அடுப்பில் | ஏராளமான | இலேசான |
| அடிக்கடி | காய்ச்சுவோம் | ஜலம் | கனமான |
| பெய்யும்போது | உஷ்ணம் | ஆவியாக | வறண்டு |
| மேகம் | நீராவி | குழாய் | இன்றேல் |
| சுலபமாக | ஏரி | எதிரில் | மன்னுயிர் |
| புகைபோல | குளம் | கற்பலகை | மாநிலம் |

## பயிற்சி

### I வினாக்கள்

1. வானத்தில் எந்தப் பொருளில் இருந்து மழை பெய்கிறது?
2. மேகம் எப்படி உண்டாயிற்று?
3. பாத்திரத்தின் குழாய்க்கு எதிரில் கற்பலகையைப் பிடித்தபோது என்ன நேர்ந்தது?
4. மேகத்தினின்று மழை தோன்றுவது எப்படி?
5. மழையின் உபயோகம் என்ன?

### II வினைச்சொற்களைப் பற்றிய அறிவு

பின்வரும் வாக்கியங்களைக் கவனி:

1. இராமா, வா.
2. கண்ணா, நில்.
3. தம்பீ, ஓடு.
4. கந்தா, படி.
5. கோபாலா, எழுது.
6. முருகா, இரு.

இவ்வாக்கியங்களில் உள்ள வா, நில், ஓடு, படி, எழுது, இரு என்பன தொழிலைக் குறிக்கின்றன. ஆகையால் இவையும் வினைச்சொற்கள் ஆகும்.

இவ்விதம் வேறு சில வினைச் சொற்களைச் சொல்லு. பின் வருவனவற்றைக் கவனி:

வா என்பதில் இருந்து வந்தேன், வந்தாய், வந்தான், வந்தாள், வந்தது முதலிய வினைச்சொற்கள் தோன்றும்.

செல் என்பதில் இருந்து செல்கிறேன், செல்கிறாய், செல்கிறோம், செல்கிறார்கள் முதலிய வினைச்சொற்கள் தோன்றும்.

நட, இரு, படி என்னும் வினைச் சொற்களிலிருந்து மேற்கண்டவாறு தோன்றக்கூடிய வினைச் சொற்களைச் சொல்லு.

# 19. அற்புத விளக்கு II

அலாவுதீன் குகைக்குள் கொஞ்சநேரம் அடைபட்டுக் கிடந்தான். அவன் வெளியே வர ஒரு வழியும் தோன்ருமல் கைகளைப் பிசைந்து கொண்டான். கைவிரல்கள் அவன் அணிந்திருந்த மோதிரத்தைத் தேய்த்தன. உடனே அவன் எதிரில் ஒரு பூதம் நின்றது. "நான் மோதிரத்தின் அடிமை. எனக்கு என்ன கட்டளை" என்று அது உரத்துச் சொல்லிற்று. ஏற்கெனவே பயந்திருந்த அலாவுதீன் மேலும் பயந்தான். இருந்தாலும் தைரியத்தைக் கைவிடாமல் "முதலில் என்னை இந்தக் குகையிலிருந்து வெளியேற்று" என்ருன். கண் இமைக்கும் நேரத்தில் அவன் மலையடிவாரத்தில் இருந்தான்!

அலாவுதீன் அங்கிருந்து நடந்து வீட்டை அடைந்தான். மந்திரவாதியால் ஏமாற்றப்பட்டதை எல்லாம் விவரமாகத் தாயாரிடம் கூறினன். அவனுக்கு வழிநடந்த களைப்பும் பசியும் அதிகமாக இருந்தன. வீட்டில் உணவு கிடையாது. சாமான் வாங்கக் கையில் பணமும் கிடையாது. அவன் தாயார், அலாவுதீன் கொண்டுவந்த விளக்கை விற்று அதனுல் கிடைக்கும் பணத்தைக்கொண்டு உணவுப் பொருள்கள் வாங்க எண்ணினுள். விளக்கு அழுக்காக இருந்ததால் அதைத் துடைக்க ஆரம்பித்தாள். உடனே அவர்கள் எதிரில் ஒரு பெரிய பூதம் தோன்றியது.

அந்தப் பூதத்தைப் பார்த்ததுமே அலாவுதீன் தாயார் மயங்கி விழுந்துவிட்டாள். அந்தப் பூதம் "நான் விளக்கின் அடிமை; எனக்கு என்ன கட்டளை" என்று கர்ஜித்தது. அலாவுதீன் தைரியமாக "எங்களுக்கு உணவு கொண்டு வா!"

என்று கட்டளையிட்டான். சிறிதுநேரத்தில் ஒரு பெரிய வெள்ளித் தட்டில் பல கிண்ணங்கள் நிறைய உணவுகள் வந்து சேர்ந்தன. அவர்கள் திருப்தியாகச் சாப்பிட்டார்கள். அதன் பிறகு, அவர்களுக்குத் தேவையான போதெல்லாம்,



வேண்டிய பொருள்கள் எல்லாவற்றையும் பூதத்தின் மூலம் வரவழைத்துக்கொண்டார்கள். கஷ்டமில்லாமல் ஜீவனம் செய்துவந்தார்கள்.

அலாவுதீன் ஒரு நாள், அந்த நாட்டு இராஜகுமாரி பல்லக்கில் ஏறிவரும்போது அவளைப்

பார்த்தான். 'நான் ஏன் அவளை மணந்து கொள்ளக்கூடாது?' என்று எண்ணமிட்டுத் தன் தாயாரை மணம் பேசிவர அரசனிடம் அனுப்பினான்.

அரசனுக்குக் காணிக்கையாகத் தான் முன்பு கொண்டுவந்த நவரத்தினங்களைக் கொடுத்து அனுப்பினான். அவன் தாயாரும் அரசனைக் கண்டு வணங்கி தன் மகனுடைய கோரிக்கையைத் தெரிவித்தாள். அரசன் ஆச்சரியம் அடைந்து "இது போல் நாற்பது தட்டுக்கள் நிறைய நவரத்தினங்கள் சீதனமாகக் கொண்டு வந்தால் செய்வோம்" என்று மறுமொழி கூறினான்.

அரசன் சொன்னதை அலாவுதீனிடம் அவன் தாயார் தெரிவித்தாள். அலாவுதீன் "நல்லது" என்று சொல்லிவிட்டு, அற்புத விளக்கைத் தேய்த்தான்; பூதம் தோன்றியது. "நாற்பது தங்கத் தட்டுக்கள் நிறைய நவரத்தினங்கள் கொண்டு வா!" என்று உத்தரவிட்டான். சிறிது நேரத்தில் தட்டுக்களும் அவற்றை எடுத்துச்செல்ல அடிமைகளும் வந்து சேர்ந்தன. இந்தச் சீதனத்தை உடனே அரசனுக்கு அலாவுதீன் அனுப்பினான். அரசனும் தன் மகளை அவனுக்கு மணம் செய்துகொடுத்தான்.

கலியாணம் ஆனபிறகு, தானும் இராஜகுமாரியும் வசிப்பதற்குப் பெரிய அரண்மனை ஒன்று வேண்டும் என்று அலாவுதீன் தீர்மானித்தான். பூதத்தை வரவழைத்தான். "அரசரின் அரண்மனைக்கு எதிரில் அதைவிட மிகவும் நேர்த்தியாக ஒரு பெரிய மாளிகை அமைக்க வேண்டும்" என்று கட்டளையிட்டான். அன்று இரவுக்குள்ளேயே அரண்மனையும் கட்டப்பட்டு முடிந்தது.

| | | |
|---|---|---|
| தோன்ருமல் | மயங்கி | கோரிக்கை |
| பிசைந்துகொண்டான் | திருப்தியாக | சீதனம் |
| அணிந்திருந்த | தேவையான | மணம் |
| அடிமை | பல்லக்கு | அரண்மனை |
| கண் இமைக்கும் | காணிக்கை | மாளிகை |
| கிடையாது | நவரத்தினங்கள் | நேர்த்தியாக |

## பயிற்சி

### I வினுக்கள்

1. அலாவுதீன் குகையினின்று எப்படி வெளி வந்தான் ?
2. அவன் இராஜகுமாரியைக் கலியாணம் செய்து கொண்டது எப்படி ?
3. மோதிரத்திற்கு அடிமையான பூதம் அவனுக்குச் செய்த உதவி என்ன ?
4. விளக்கிற்கு அடிமையான பூதம் அவனுக்குச் செய்த உதவிகள் எவை ?

### வினைச்சொல் அறிவு

**பின்வரும் வாக்கியங்களில் உள்ள வினைச்சொற்களை எழுது :**

1. அலாவுதீன் மோதிரத்தைத் தேய்த்தான்.
2. எங்களுக்கு உணவு கொண்டு வா.
3. இராஜகுமாரி பல்லக்கில் வந்தாள்.
4. அரசன் மறுமொழி கூறினன்.
5. அரசனுக்குக் காணிக்கை அனுப்பினன்.
6. அவன் பூதத்தை வரவழைத்தான்.
7. பூதம் மாளிகை கட்டிற்று.
8. மாளிகையில் இராஜகுமாரி வசித்தாள்.

## 20. சின்னப் பொம்மை

சின்னச் சின்னப் பொம்மை.
சிறிய நல்ல பொம்மை.
என்ன வேண்டும் சொல்லேன்?
ஏனோ பேச வில்லை?

பாட ஆட மாட்டாய்,
பரம சாதுப் பொம்மை.
தேட வைத்து விட்டே
தெருவில் ஓட மாட்டாய்.

வளர வில்லை உன்றன்
வயதும் தெரிய வில்லை.
அழவே மாட்டாய். நல்ல
அழகுப் பொம்மை நீதான்.

கொஞ்ச மேனும் உண்பாய்.
கோபம் வேண்டாம், கண்ணே.
பஞ்சு மெத்தை தாரேன்.
படுத்துக் கொள்வாய், கண்ணே.

அம்மா என்மேல் என்றும்
அன்பு காட்டக் காண்பாய்.
அம்மா திரியே உன்மேல்
ஆசை கொண்டேன், நானே.

—குழந்தைக் கவிஞர் அழ. வள்ளியப்பா

# 21. என் பிரயாணம்

நான் ஒரு தபால் கடிதம். என்னைப் போஸ்ட் கார்டு என்று சொல்லுவார்கள். இதோ ஒரு சிறுவன் ஒரு போஸ்ட் கார்டில் ஏதோ எழுதுகிறான் பார்!



தஞ்சாவூரில் உள்ள தன் மாமனுக்கு அவன் என்மீது எழுதினான். இந்தப் பையன் சென்னையில் இருக்கிறான். நான் எப்படித் தஞ்சாவூரில் அவன் மாமன் வீட்டை அடைந்தேன்? நானே சொல்லுகிறேன் கேளுங்கள்.



என்னை எழுதி முடித்ததும் அந்தச் சிறுவன் என்னைத் தன் வீட்டிற்கு அருகிலுள்ள ஒரு தபால் பெட்டியில் போட்டான். பிறகு தபாலாபீசிலிருந்து ஒரு தபாற்சேவகன் வந்து இந்தப் பெட்டியிலிருந்த எல்லாக் கடிதங்களையும் எடுத்தான்; தன்னிடமுள்ள ஒரு பையில் அவற்றைப் போட்டுக்கொண்டு தபாலாபீசுக்குச் சென்றான்.



தபாலாபீசில் கடிதங்களில் உள்ள ஸ்டாம்புகளின்மேல் முத்திரை இட்டார்கள். பிறகு எல்லாக் கடிதங்களையும் பல கட்டுகளாகக் கட்டினார்கள். என்மீது உள்ள ஸ்டாம்பின்

மேலும் முத்திரை இடப்பட்டது. நானும் ஒரு பைக்குள் போய்ச் சேர்ந்தேன்.



பிறகு, மற்றொரு தபாற் சேவகன் கடிதங்கள் உள்ள பைகளை எல்லாம் எடுத்து தபால் வண்டி ஒன்றில் போட்டுக் கொண்டு இரயில்வே ஸ்டேஷனுக்கு போனான்.




இரயில்வே ஸ்டேஷன் பிளாட்பாரத்தின் ஓரிடத்தில் தபால் வண்டியில் இருந்து மூட்டைகளை இறக்கி வைத்தார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் இரயில் வந்தது. இரயிலில் ஒரு தபால்வண்டி இருந்தது. கீழே உள்ள தபால் மூட்டைகளை அதில் ஏற்றினார்கள். அதில் உள்ள மூட்டைகள் சிலவற்றைக் கீழே இறக்கினார்கள். இரயிலும் புறப்பட்டுச் சென்றது.



இரயில் வண்டிக்குள் தபால் உத்தியோகஸ்தர் ஒருவர் இருந்தார். இன்னும் சில ஸார்ட்டர்கள் இருந்தார்கள். அவர்களுக்கு எதிரில் சிறு சிறு அறைகள் அநேகம் கொண்ட பெரிய அலமாரி இருந்தது. அவர்கள் பைகளை அவிழ்த்து ஒவ்வொன்றாகப் பார்த்துப்பார்த்து அந்தச்சிறு அறைகளில் கடிதங்களை எடுத்துப் போட்டார்கள்.

என்னையும் ஓர் அறையில் தூக்கிப்போட்டார். அங்கு தஞ்சாவூர் செல்ல வேண்டிய பல கடிதங்கள் இருந்தன. என்மேலும் பல கடிதங்கள் விழுந்தன. தஞ்சாவூர் ஸ்டேஷன் நெருங்கியதும் என்னையும் என் கூட இருந்த மற்றக் கடிதங்களையும் எடுத்து எங்கள் எல்லோரையும் ஒரு பையில் போட்டுக் கட்டி அதன் வாயைச் சீல் வைத்து அடைத்து விட்டார்கள்.

தஞ்சாவூர் ஸ்டேஷனில் இரயில் வந்து நின்றது. தபால் வண்டிக்குப் பக்கத்தில் பல தபாற் சேவகர்கள் வந்து நின்றுகொண்டிருந்தார்கள்.



வண்டியிலிருந்த அதிகாரி நான் இருந்த பையையும் வேறு பல பைகளையும் இறக்கி அவர்களிடம் கொடுத்தார். இந்த முட்டைகளையெல்லாம் முன் போல் ஒரு கைவண்டியில் ஏற்றி, தஞ்சாவூர்த் தபாலாபீசுக்கு எடுத்துச் சென்றார்கள்.

தஞ்சாவூர்த் தபாலாபீசில் மூட்டைகளை அவிழ்த்து, கடிதங்களுக் கெல்லாம் மறுபடியும்

ஒரு முத்திரை குத்தினார்கள். என்மேலும் ஒரு குத்து விழுந்தது. அப்பா, என்ன வலி! பிறகு எல்லாக் கடிதங்களையும் அங்கே இருந்த ஒரு பெரிய மேஜைக்கு எடுத்துச் சென்றார்கள். அந்த மேஜையைச் சுற்றிலும் பல **தபால்காரர்கள்** உட்கார்ந்திருந்தார்கள்.

ஒரு தபால்காரர் கையில் நானும் போய்ச் சேர்ந்தேன். தபால்காரர் புறப்பட்டார். மேலே இராஜ வீதியில் இருந்த அச்சிறுவனது மாமன் வீட்டில் கொண்டுபோய் என்னைக் கொடுத்து விட்டு அவர் சென்றுவிட்டார். பையனின் மாமன் என்னை அன்புடன் பார்த்தார் என்மேல் எழுதியிருந்தவைகளைப் படித்தார்; சந்தோஷம் அடைந்தார். எப்படி இருக்கிறது என் பிரயாணம்!

| | | |
|---|---|---|
| தபால் | தபாற் சேவகன் | ஸார்ட்டர்கள் |
| போஸ்டு கார்டு | தபால் வண்டி | அலமாரி |
| தஞ்சாவூர் | ஸ்டாம்பு | விழுந்தன |
| சென்னை | முத்திரை | குத்தினார்கள் |
| போடப்பட்ட | இரயில்வே ஸ்டேஷன் | அவிழ்த்து |
| முடித்ததும் | பிளாட்பாரம் | பிரயாணம் |
| தபால் பெட்டி | உத்தியோகஸ்தர் | இடப்பட்டது |

பயிற்சி

I வினாக்கள்

1. சிறுவன் கடிதத்தை எழுதி எங்கே போட்டான்?
2. கடிதத்தைத் தபாலாபீசில் உள்ளவர்கள் என்ன செய்தார்கள்?
3. இரயில் வண்டியில் உள்ளவர்கள் கடிதங்களை என்ன செய்தார்கள்?
4. கடிதம் தஞ்சாவூரை அடைந்தது எப்படி?
5. கடிதம் தஞ்சாவூரில் மாமன் வீட்டை அடைந்தது எப்படி?

II கடிதத்தின் பிரயாணத்தை நாடகமாக நடிக்கவும்.

# 22. அற்புத விளக்கு III

ஒரே நாளிரவில் கட்டப்பட்ட அரண்மனையை அரசன் பார்த்து அதிசயித்தான். அலாவுதீனும் அரசகுமாரியும் சந்தோஷமாகப் புதிய அரண்மனையில் வாழ்ந்து வந்தார்கள்.

மந்திரவாதி, அலாவுதீன் குகையினின்று பிழைத்து வந்து அரசகுமாரியைக் கலியாணம் செய்து கொண்டதை அறிந்தான். அவனிடம் இருக்கும் அற்புத விளக்கைத் தான் கவர்ந்து கொள்ளச் சூழ்ச்சி செய்யலானான்.

இன்பமாகப் புதிய அரண்மனையில் வாழ்ந்து வந்த அலாவுதீன் ஒரு நாள் வேட்டைக்குப் போய்விட்டான். அவன் செயல்களைக் கவனித்து வந்த மந்திரவாதி தன் எண்ணத்தை நிறைவேற்ற அதுவே ஏற்ற சமயம் என்று தீர்மானித்தான். பல புதிய விளக்குகளை ஒரு கூடையில் வைத்து எடுத்துக்கொண்டு தெரு வழியே சென்றான். "பழைய விளக்குகளுக்குப் புதிய விளக்கு! எவர் வேண்டுமானாலும் விளக்குகளை மாற்றிக் கொள்ளலாம்!" என்று கூவினான். இதைப் பார்த்துப் பலர் பரிகசித்தார்கள். அவன் அலாவுதீன் இருந்த அரண்மனையை அடைந்தபோது இராஜகுமாரி அவன் கூவுவதைக் கவனித்தாள்.

இராஜகுமாரி, தன் கணவன் அறையில் இருக்கும் பழைய விளக்கைக் கொடுத்துப் புதிய விளக்கை வாங்க எண்ணினாள். அது அற்புத விளக்கு என்பது அவளுக்குத் தெரியாது! ஒரு வேலைக்காரியிடம் அதைக் கொடுத்தனுப்பி, புதிய விளக்கு வாங்கிவரச் செய்தாள். மந்திரவாதியும் தன் தந்திரம் பலித்ததைக் கண்டு சந்தோஷம் கொண்டு அற்புத விளக்கைப் பெற்றுச் சென்றான்.

மந்திரவாதி, தன் இருப்பிடத்தை அடைந்து அன்று இரவு அற்புத விளக்கைத் தேய்த்துப் பூதத்தை வரவழைத்தான். "அந்தப் புதிய அரண்மனையை அதில் உள்ள பொருள்களுடன் அடியோடு பெயர்த்து எடுத்துக் கொண்டுபோய், இங்கிருந்து ஆயிரம் மைல்களுக்கு அப்பால் வைத்துவிடு" என்று கட்டளையிட்டான். பூதமும் அவ்வாறே செய்து முடித்தது.

வேட்டையாடிவிட்டுத் திரும்பி வந்த அலாவுதீன் தன் அரண்மனை மறைந்து போனதை யறிந்து வருந்தினன். 'இதை எப்படியாவது கண்டு பிடித்து வருகிறேன்' என்று அலாவுதீன் உறுதி செய்துகொண்டு புறப்பட்டான். அலாவுதீனுக்கு முதலில் என்ன செய்வது என்று புரியவில்லை. பிறகு, தான் அணிந்திருந்த மோதிரத்தின் ஞாபகம் வந்தது. அதைத் தேய்த்துப் பூதத்தை வரவழைத்தான். "ஏ பூதமே! என் அரண்மனை இருக்கும் இடத்திற்கு என்னைக் கொண்டுபோ!" என்று கட்டளையிட்டான். பூதம் அப்படியே செய்தது.

அலாவுதீன், மோதிரத்திற்குரிய பூதத்தின் உதவியால் தன் மனைவியைக் கண்டுபேசி நடந்ததை அறிந்தான். பிறகு அவளைப் பார்த்து "நான் ஒரு மருந்து கொண்டுவந்து தருகிறேன். அதை அவன் சாப்பாட்டில் கலந்துவிடு; அவன் இறந்து விடுவான். அவனிடமிருந்து விளக்கை எடுத்துக் கொண்டு நம் ஊருக்குச் சென்றுவிடலாம்" என்று கூறிச் சென்றான்.

அலாவுதீன் கடைக்குச் சென்று ஏதோ ஒரு விஷ மருந்து வாங்கிவந்து இராஜகுமாரியிடம் கொடுத்தான். இராஜகுமாரியும் மந்திரவாதியின் உணவில் அதைக் கலந்துவிட்டாள். அன்று

இரவு சாப்பிட்டவுடன் மந்திரவாதி இறந்தான். அற்புத விளக்கு மறுபடியும் அலாவுதீனிடம் வந்து சேர்ந்தது.

அலாவுதீன் அற்புத விளக்கைத் தேய்த்தான். பூதம் எதிரே நின்றது. " இந்த அரண



மனையை முன் இருந்த இடத்திலேயே கொண்டு போய் வைத்து விடு! " என்று உத்தரவிட்டான். பூதமும் அவ்வாறே செய்தது; அரண்மனை முன் இருந்த இடத்தைச் சேர்ந்தது.

அரசன் மறுபடியும் தன் மகளையும் மருமகனை அலாவுதீனையும் கண்டு மகிழ்ந்தான். அதன் பின் அவர்கள் யாவரும் எவ்விதக் கவலையுமில்லாமல் அந்தப் புதிய அரண்மனையிலேயே சந்தோஷமாக வாழ்ந்து வந்தார்கள்.

| | | |
|---|---|---|
| இன்பமாக | வாங்க | எவருடைய |
| வேட்டைக்கு | பலித்தது | சூழ்ச்சியோ |
| நிறைவேற்ற | இருப்பிடம் | விடைபெற்று |
| தீர்மானித்தான் | அடியோடு | புரியவில்லை |
| மாற்றிக்கொள்ளலாம் | பெயர்த்து | உத்தரவிட்டான் |
| கூவினான் | மறைந்து | மருமகன் |

## பயிற்சி

### 1 வினாக்கள்

1. அலாவுதீன் வேட்டைக்குச் சென்றபோது நேர்ந்தது என்ன ?
2. அலாவுதீனிடம் இருந்த அற்புத விளக்கை மந்திரவாதி எப்படி அடைந்தான் ?
3. அற்புத விளக்கைப் பெற்றபின் மந்திரவாதி என்ன செய்தான் ?
4. மந்திரவாதியிடம் இருந்த அற்புத விளக்கை அலாவுதீன் எப்படித் திரும்பப் பெற்றான் ?

### 11 முற்றுப்புள்ளி அறிவு

பின்கண்டவைகளைக் கவனி :

1. அலாவுதீன் குகைக்குள் இறங்கிச் சென்றான்.
2. அவன் கையில் ஒரு மோதிரம் இருந்தது.
3. அலாவுதீன் பூதத்தை வரவழைத்தான்.

இவ் வாக்கியங்களின் முடிவில் ஒரு புள்ளி இடப்பட்டிருப்பதைப் பாருங்கள். அது எதற்காக இடப்பட்டிருக்கிறது, தெரியுமா ? அப்படிப் புள்ளியிட்ட இடத்திலே நன்றாக நிறுத்த வேண்டியிருப்பதைக் கவனியுங்கள். அப்படி நிறுத்த வேண்டும் என்பதைத்தான் அந்தப் புள்ளி குறிக்கிறது. உங்கள் புத்தகத்தில் உள்ள ஏதாவது ஒரு பாடத்தை எடுத்து வாசியுங்கள். அப்படிப் புள்ளி இடப்பட்ட இடங்கள் எவை என்று கவனியுங்கள்.

. இதுதான் முற்றுப்புள்ளிக் குறி

**பின்கண்ட பத்தியில் முற்றுப் புள்ளி இருக்க வேண்டிய இடங்களில் முற்றுப் புள்ளியை அமை:**

அரசகுமாரி தன் கணவன் அறையில் இருக்கும் பழைய விளக்கைக் கொடுத்துப் புதிய விளக்கு வாங்க விரும்பினாள் அது அற்புத விளக்கு என்பது அவளுக்குத் தெரியாது ஒரு வேலைக்காரியிடம் அதைக் கொடுத்து அனுப்பினாள் புதிய விளக்கு வாங்கிவரச் செய்தாள்

# 23. ஆமையும் முயலும்

காட்சி I

[பல முயல்கள் ஓரிடத்தில் கூடியிருக்கின்றன. அங்கே ஒரு ஆமை வருகிறது.]



ஒரு முயல்: இந்த ஆமையைப் பாருங்கள். ஆஹா! எவ்வளவு சுறுசுறுப்பு! எவ்வளவு வேகம்!

(எல்லா முயல்களும் சிரிக்கின்றன.)

ஆமை: முயல் அண்ணன்மார்களே! நீங்கள் ஏன் சிரிக்கிறீர்கள்?

முயல்: உன் நடை அழகையும் உன் வேகத்தையும் கண்டதும் எங்களுக்கு அளவு கடந்த சந்தோஷம் உண்டாகிவிட்டது!



ஆமை: முயலாரே, ஏன் ஏளனம் செய்கிறீர்கள்? மற்றவர்களை ஏளனம்செய்கிறவர்கள் தாங்களே அவமானமடைவார்கள்; தெரிந்து கொள்ளுங்கள்.

முயல்: ஆமையாரே, நான் தங்களை ஏளனமா செய்கிறேன்? புகழ அல்லவா செய்கிறேன்! தங்கள் நடை என்ன, தங்கள் ஓட்டம் என்ன! எனக்குக்கூடத் தங்களுடன் பந்தய ஓட்டம் ஓட வேண்டும் என்று ஆசையாக இருக்கிறது.

(முயல்கள் மறுபடியும் சிரிக்கின்றன.)

ஆமை: மேலும் என்னைப் பரிகாசம் செய்கிறீர்களா? ஏ முயலே, பந்தய ஓட்டத்தில் நான் உன்னை ஜயித்து விட்டால்?

முயல்; ஆஹா, ஜயிப்பீர்; நன்றாக ஜயிப்பீர்! உமது வேகம் யாருக்கு வரும்!

ஆமை: வீண் பேச்சும் கேலியும் வேண்டாம். அதோ நரியார் வருகிறார். அவரை மத்தியஸ்தராக வைத்து நாம் இருவரும் பந்தயம் ஓடுவோம்.

(நரியார் வருகிறார்.)

நரி: என்ன, இங்கே எல்லோரும் கூட்டம் போட்டு இருக்கிறீர்கள்!

முயல்: இந்த ஆமையார் என்னோடு பந்தய ஓட்டம் ஓடுவதாகச் சவால் விடுகிறார்!

ஆமை: ஐயா, நரியாரே, வந்தனம். என்னை இந்த முயல்கள் பரிகாசம் செய்கின்றன. என்னை



இந்த முயல் ஓட்டப் பந்தயத்துக்குக் கூப்பிடுவது போல் பேசி என் மனத்தைப் புண்படுத்தி விட்டது; நான் பந்தயத்துக்குக் கூப்பிடுவதாகத் தங்களிடம் சொல்கிறது.

நரி: சரிதான், நீர் ஓட்டப் பந்தயத்திற்கு ஒப்புக்கொண்டீரோ?

ஆமை: கோபத்தால் ஒரு போக்காக அப்படிச் சொன்னேன்.

**நரி**: நல்லது! நான் ஒரு ஏற்பாடு செய்கி றேன்! அதற்கு ஒத்துக் கொள்வீர்களா?

**முயல்**: ஆஹா, தாராளமாக.

**ஆமை**: தாங்கள் செல்லுவதுபோல் நடக் கிறேன்.

**நரி**: அதோ தூரத்தில் ஆலமரம் தெரிகிற தல்லவா? அந்த இடத்திற்கு இங்கிருந்து நீங்கள் இருவரும் ஓடவேண்டும். முயல் ஜயித்தால், ஆமை ஏளனம் செய்ததைப் பொறுத்துக்கொள்ள வேண்டும்; ஆமை ஜயித்தால், முயல்கள் இனி ஆமையை ஏளனம் செய்யக்கூடாது, தெரிந்ததா?

**முயல்கள்**: நாங்கள் ஒப்புக்கொள்கிறோம்.

**ஆமை**: நானும் ஒத்துக்கொள்கிறேன். நரி யாரே! தயவுசெய்து தாங்களே மத்தியஸ்தராக இருந்து முடிவு கூற வேண்டுகிறேன்.

**நரி**: ஆஹா, அப்படியே ஆகட்டும். இப் பொழுதே ஓடத்தொடங்குங்கள். மாலை ஆறுமணி வரையில் நீங்கள் ஓடலாம். நான் அப்பொழுது அம்மரத்தின் அருகில் இருப்பேன். முடிவைக் கவனித்துத் தீர்ப்புச் சொல்வேன்.

(நரி ஒரு கோடு கிழிக்கிறது. முயலும் ஆமையும் கோட்டில் வந்து நிற்கின்றன.)

**நரி**: ஒன்று......இரண்டு......மூன்று.

(முயல் பாய்ந்து ஓடுகிறது; ஆமை அசைந்து நகருகிறது.)

### காட்சி II

**முயல்**: (பாதி வழியில் ஒரு மரத்தடியில் நின்று) ஓட்டப் பந்தயம்! ஆமை என்னை ஜயிக்கவா! ஆமையோ கண்ணுக் கெட்டிய வரை யில் காணவே காணோம். ஒரு நொடியில் நான்

பாதி தூரம் ஓடி வந்துவிட்டேன். ஆமை உத்தேசமாக இங்கு வந்து சேர, குறைந்தது மாலை மூன்று மணியாவது ஆகும். அதுவரையில் நான் ஏன் ஓடவேண்டும்! இந்த மர நிழல் எவ்வளவு சுகமாய் இருக்கிறது! இங்கே சற்று படுத்துத் தூங்குவோம்; மூன்று மணிக்கு விழித்துக்கொள்ளலாம். அப்புறம், ஒரே ஓட்டம். ஜயம் முயலார்தான்!

(முயல் மரத்தடியில் படுத்துத் தூங்கிவிட்டது.)



ஆமை: பந்தயத்தில் நான் என்னவோ ஜயிக்கப்போவதில்லை! என்னவோ ஒத்துக்கொண்டாகிவிட்டது. மணியோ மூன்று ஆகிவிட்டது; களைப்பும் அதிகமாக இருக்கிறது. இங்கு சிறிது நேரம் இளைப்பாறிச் செல்வோம்.

(அந்த மரத்தடியில் முயல் படுத்திருப்பதைப் பார்த்து) இதென்ன, முயல் இங்கே படுத்துத் தூங்குகிறது! நல்ல வேளை, சிரமத்தைப் பாராமல் விடாமுயற்சியோடு சென்றால் ஏன் ஜெலிக்க முடியாது?

(ஆமை போய்க்கொண்டே இருக்கிறது.)

முயல்: (விழித்து) ஆ; எவ்வளவு நேரம் தூங்கிவிட்டேன்! அதோ சூரியன் மறையப் போகிறதே! ஆமை இதோ நகர்ந்துபோயிருப்பது தெரிகிறது! அது இதற்குள் மரத்தடிக்குப் போயிருக்காது. ஓடிப் பார்ப்போம் (ஓடுகிறது).

காட்சி III

(ஆமை கெலிப்புக் கோட்டைத் தாண்டி விட்டது.)



நரி: ஆமையாரே, கெலித்து விட்டீர்!

(அப்பொழுதுதான் வந்துசேர்ந்த முயலைப் பார்த்து)

ஐயா முயலாரே, நீர் பந்தயத்தில் பிந்தி விட்டீரே? பந்தய முடிவு, ஆமை ஐயித்தது, நீர் தோற்று விட்டீர். இன்று முதல் நீரும் உன் இனத்தாரும் அவரை ஏளனம் செய்யக்கூடாது.

முயல்: ஐயா நரியாரே, நான் செய்தது குற்றம் தான். இனி அப்படிச் செய்வதில்லை. இன்று நல்ல பாடம் கற்றுக்கொண்டேன்.

நரி: தெரிந்துகொள்:

விடாமுயற்சியே வெற்றிக்குக் காரணம்.

## செய்யுட் பாடங்கள்

### சுதேச வணக்கம்

1. எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே—அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே—இதை
வந்தனைகூறி மனதில் இருத்தி யென்
வாயுற வாழ்த்தேனோ—இதை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கேனோ!

2. மங்கையர் ஆயவர் இல்லறம் நன்கு
வளர்த்ததும் இந்நாடே—அவர்
தங்க மதலைகள் ஈன்று அமுதூட்டித்
தழுவியது இந்நாடே—மக்கள்
துங்கம் உயர்ந்து வளர்கெனக் கோயில்கள்
சூழ்ந்ததும் இந்நாடே—பின்னர்
அங்கவர் மாய அவருடல் பூந்துகள்
ஆர்ந்ததும் இந்நாடே—இதை
வந்தே மாதரம் வந்தே மாதரம்
என்று வணங்கேனோ!

—பாரதியார்

---

## நீதிகள்

### 1. கடவுள்

1. தெய்வத்தை ஒருநாளும் மறக்கவேண்டாம்.

### 2. கோவில்

2. ஆலயம் தொழுவது சாலவும் நன்று
3. கோயில் இல்லாவூரில் குடியிருக்கவேண்டாம்.

### 3. ஆசிரியர்

4. எழுத்தறி வித்தவன் இறைவன் ஆகும்.

### 4. பெற்ரோர்

5. தந்தை தாய்ப் பேண்.
6. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
7. தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை
8. தாய் சொல் துறந்தால் வாசகம் இல்லை.
9. தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை
10. மாதாவை ஒரு நாளும் மறக்க வேண்டாம்.

### 5. கல்வி

11. இளமையிற் கல்.
12. நூல் பல கல்.
13. ஓதுவது ஒழியேல்
14. எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.
15. கைப்பொருள் தன்னில் மெய்ப்பொருள் கல்வி
16. ஓதாதார்க் கில்லை உணர்வொடும் ஒழுக்கம்.
17. ஓதாமல் ஒருநாளும் இருக்கவேண்டாம்.
18. கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே.

### 6 பெரியார் நட்பு

19. பெரியாரைத் துணைக் கொள்.
20. ஒரு நாட் பழகினும் பெரியோர் கேண்மை
இரு நிலம் பிளக்க வேர் வீழ்க்கும்மே.

## 7. பெரியோர் சொல் கேள்

21. மேன் மக்கள் சொற் கேள்.
22. மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.
23. மூத்தோர் சொல் வார்த்தைதனை மறக்க வேண்டாம்.

## 8. ஊக்கம்

24 ஊக்கமது கைவிடேல்.
25. ஊக்கம் உடைமை ஆக்கத்திற்கு அழகு.
26. கேட்டில் உறுதி கூட்டும் உடைமை.

## 9. உழவு

27. பூமி திருத்தி உண்.
28. சீரைத் தேடின் ஏரைத் தேடு
29. மேழிச் செல்வம் கோழை படாது.
30. தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது.

## 10. பொருள்

31 பொருள்தனைப் போற்றி வாழ்.
32. திரைகடல் ஓடியும் திரவியம் தேடு.
33 தேடாது அழிக்கின் பாடாய் முடியும்.

## 11. அழகு

34. கல்விக் கழகு கசடற மொழிதல்.
35. செல்வர்க் கழகு செழுங்கிளை தாங்குதல்.
36. மன்னர்க் கழகு செங்கோன் முறைமை..
37. மந்திரிக் கழகு வரும்பொருள் உரைத்தல்.
38. தந்திரிக் கழகு தறுகண் ஆண்மை.
39. அறிஞர்க் கழகு கற்றுணர்ந்து அடங்கல்.
40 வறிஞர்க் கழகு வறுமையிற் செம்மை.

147819
600 008.

# KANTI TAMIL VACHAKAM

**STANDARD III**

BY

**Vidwan T. AIYENPERUMAL KONAR**

PALANIAPPA BROTHERS

TRICHY : : MADRAS.

**Price Annas 0—7—6**

Printed at the Royal Printing Works, Madras-2.